உ

சிவமயம்.

திருக்கடவூர்

உய்யவந்ததேவநாயனார்

அருளிச்செய்த

திருக்களிற்றுப்படியார்மூலமும்

திருவாவடுதுறையாதீனம்

தில்லைச்சிற்றம்பலவரென்னும்

சிவப்பிரகாசனார்செய்த உரையும்.

இவை,

காஞ்சிபுரம்

மகாவித்துவான்

கந்தசாமிமுதலியார்

மாணாக்கர்

கா- சுந்தரமூர்த்திமுதலியார்

அவர்கள் பார்வையிட்டு,

க- முருகேச முதலியாரால்

சென்னை

ஜீவகாருண்யவிலாசஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1898௵

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்களிற்றுப்படியார் வரலாறு.

ஞானசாத்திரம் பதினான்கினுக்கு முன் னுண்டாம் திருவுந்தியாரை யருளிச்செய்த உய்யவந்த தேவநாயனாரது மாணாக்கர் திருவிசலூர் ஆளுடைய தேவநாயனார், அவர்மாணாக்கர் திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார்.

இவர் பெருப்பற்றப்புலியூரி லெழுந்தருளியிருக்குநாளில் மிகுந்த பக்குவமுடையாரொருவர் தன்னைக்கண்டுதரிசிக்க அவருக்குச் சிவதீக்ஷைசெய்து அவர்சந்தேகவிபரீத மகல்வதாயும் சிவானுபூதிச்செல்வத்தை யிடைவிடாம லனுபவிப்பதாயும் தனதுபரமாசாரியார்செய்த திருவுந்தியாரின் கருத்தை விளங்கக்காட்டுவதாயும் நூறுவெண்பாவில் ஓர்சாஸ்திரஞ்செய்தனர்.

அச்சாத்திரத்தை விசுவத்துள்ளா ரங்கீகரித்துய்யும்படி திருவம்பலத்திற்சென்று நடேசனைத்தியானித்துத் தாமருளிச்செய்த திருவெண்பாவை நடேசர் முன்னிருக்கப்பெற்ற திருக்களிற்றுப்படியில் வைத்தருளினர் அத்திருக்களிறானது கைநிமிர்ந்து இச்சாத்திரம்நடேசர்திருவடியடைவோர்க் கெளிதாகிய கருவியென அங்குள்ளாருணரும்படி நடேசர் திருவடியில்வைத்தருளியது

அப்போதங்குள்ள தில்லைவாழந்தணர் மூவாயிரவரும், திருப்படைவீட் டெழுநூறுமடத்து முதலிகளும் மகேஸ்வரர் நாற்பத்தெண்ணாயிரவரும் திருக்கோயில்நிமித்தஞ்செய்யும் திருப்பேரோழாயிரத்துத் தொளாயிரவரும், இத்திருப்படைவீட்டி லெழுந்தருளியிருக்கும் கல்லியாணர்களும் கண்டதிசயித்திந்நூலுக்குத் திருக்களிற்றுப் படியென்னும் காரணப்பெயரிட்டருளினர்.

இந்நூற்குமுன்னொருவர் திருவெண்காடுடையார் காரணமாய் உரைசெய்தனர் அவ்வுரை இச் சாத்திரக்கருத்துக் கமையாததால் திருநந்திதேவநாயனார் பரியாயத்தில் திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டதேவர் திருவடியாரில் திருவாவடுதுறையில் தில்லைச்சிற்றம்பலவர் சிவப்பிரகாசர் முன்னூற்கும் இந்நூற்கும்மாறுபாடின்றி உரைசெய்தருளினர்.

இந்நூல் தில்லையம்பலத்தில் நடேசராலங்கீகரிக்கப்பட்டதாயும் அதிபக்குவமுடைய மானுடர்க் கெளிதிலுணரப்படுவதாயும் சைவசித்தாந்த சாஸ்திரங்களின் கருத்தைக் கரதலாமலகம்போற் சுருக்கியுணர்த்துவதாயுமிருப்பதால் இதைப்பத்தி சிரத்தையுடன்மனனஞ்செய்பவர்கள் சன்னசாகரத்தை நீங்கி மோக்ஷமென்னுங் கரையேறுகை உண்மை! உண்மை!! உண்மை!!!

திருச்சிற்றம்பலம்,

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

திருக்களிற்றுப்படியார்.

வெண்பா,

அம்மையப்பரேயுலகுக் கம்மையப்பரென்றறிக
வம்மையப்பரப்பரிசே வந்தளிப்ப-ரம்மையப்ப
ரெல்லாவுலகுக்கு மப்புறத்தாரிப்புறத்து
மல்லார்போ னிற்பாரவர்.

இ-ள், அம்மையப்பரே யுலகுக் கம்மையப்பரென்றறிக = மாணவகனே சங்காரமானகாலத்து மலசகிதரான மூன்றுவகைப்பட்ட வான்மாக்களையு மாயைகளிலேயொடுக்கி யிந்தமலமாயாதி கன்மங்களுடனே யான்மாக்களையுஞ் சிவசத்தியிடத்திலேயொடுக்கி யிந்தச்சத்தியையுந் தம்மிடத்திலே காத்துக்கொண்டு சிவமொன்றுமேயாய் நிற்கையில் பின்பு மிந்தக்காலமானதுசென்று சிருஷ்டிகர்லமான வவதரத்திலே தம்முடைய காருண்யத்தின் மிகுதியாலே யிருந்த வான்மாக்களைப் பக்குவப்பட்ட கன்மமலத்தைக்கூட்டிப் புசிப்பிக்கவு மாணவமலத்தைப்பக்குவமாக்கும்பொருட்டு மந்தச்சத்தியை மீண்டும் பிரகாசிப்பித்து அந்தச்சத்தியிடத்திலே தாமும்பொருந்தி யந்தச்சத்தியி லொடுங்கிக்கிடந்த மலசகிதரான வான்மாக்களையுந் தோற்றுவித்து இவர்களுக்கு முன்புவிட்ட குறைக்கீடான தனுகரணபுவனபோகங்களையுங்கொடுத்துத் தாமும்முதல்கெடாமல்நின்றும் அவற்றிற்குமவையவராயவர்களைக் கன்மமலங்களுக் கீடாகநின்று புசிப்பித்துஇப்படிச்செய்கிற தம்மையுமிந்த வுபகாரங்களையுந் தெரியாமல்விஷயாதிகளிலேயிரோசிக்கும்படி. திரோபவித்து இந்த நாலுகிருத்திய

த்தினாலுங் கன்மமுந் தலையொத்து மலபாகமுமுண்டா யிவர்கள்முத்திக்கும் பிராரத்தராவா ரெப்போதென் றநவரதமுந் திருவுள்ளத்தி லநுக்கிரகமேபண்ணி யிப்படியுள்ள பஞ்சகிருத்தியங்களைத் தம்முடையவருளாலே நடத்திப்போதாநின்ற காலங்களிலே பக்குவப்பட்ட ஆன்மாக்களையறிந்து அவர்க ளளவுக்களவான தீக்கைகளாலே யிரக்ஷித்து முறைமையிலேகூட்டிக்கொள்ளுகையால் இந்தச்சக்தியையுடையசிவனே சர்வ லோகங்களுக்குந் தாயுந்தந்தையுமென்றறிவாயாக பக்குவப்பட்டஆன்மாக்களைத் தம்முடையவருளாலே நடத்திப்போதாநின்றகாலங்களிலே யிரக்ஷிக்குமுறைமை யெப்படியெனில்?—அம்மையப்பரப் பரிசேவந்தளிப்பர்=அந்தச்சத்தியையுடைய சிவன் பக்குவப்பட்டவான்மாக்களை யறிந்து ஒருமலத்துடனேநின்ற விஞ்ஞானகலரிற் பக்குவர்க்கு பிராணனாய்நின் றம்முறைமையிலே பிரகாசித்தும். இரண்டுமலத்துடனேநின்ற பிரளயாகலரிற் பக்குவற்கு திவ்வியமான திருமேனியுடனே தோன்றி யந்தத்தரிசனத்தாலும் இரக்ஷித்து மூன்றுமலத்துடனேநின்ற சகலரில் பக்குவற்குஅவர்களைப்போன்ற திருமேனியுடனே யெழுந்தருளிவந்து சத்தினிபாதத்துக்கீடாக நாலுவகைப்பட்டதீக்கைகளாலுந் "திருநோக்கால் பரிசத்தால் திகழும்வாக்கால் பாவனையால் மிகுநூலால் யோகப்பண்பால், என்கிறபிரமாணப்படியே ஆறுவகைப்பட்ட காருண்ணியத்தாலு மிரக்ஷித்து இப்படி இந்தமுறைமைகளிலே யநுக்கிரகியாநிற்பார். இப்படித்திருமேனிகொள்வாராகிலவருமிந்த லோகங்களிலுள்ளாரிலே யொருவ ராகாரோவெனில்?---அம்மையப்பரெல்லாவுலகுக்கு மப்புறத்தார்=அருளாலேதிருமேனிகொண்டு இரக்ஷித்ததொழிந்து அவருண்மையறியாரறியுமிடத்தும் பிருதுவிமுதல் நாதமீறான தத்துவங்களுக்குஅப்பாற்பட்டுநின்றே யறியவேண்டுகையா லறியப்பட்டசத்தியுடையசிவனுமிந்தச சர்வலோகங்களுக்கு மப்பாற்பட்டே யிராநிற்பன் சிவன்

பிரபஞ்சத்துக்குமப்பாற்பட்டே யிருப்பாளுகில் பிரபஞ்சந்தா னே நடந்ததோவென்னில்?—இப்புறத்து மல்லார்போனிற்பார வர்=தம்முடையவருளாலே சர்வலோகங்களையு நடத்தும்பொரு ட்டுத் தம்முடைய சொருபந் தோன்றுதபடி யாறுவகைப்பட்ட வத்துவாக்களே திருமேனியாகக்கொண்டு தந்தாம்பிரக்ஞையா லே பிரபஞ்சநடவாநிற்கத் தாமவையவராயசைவின்றியே யொ ரு பணியற நில்லாநிர்பர்,

இதனுற்சொல்லியது கர்த்தாவையுஞ் சத்தியையும் மூன்று வகைப்பட்ட ஆன்மாக்களையும், மலங்களையும், பஞ்சகிருத்தியத் தையும், மூன்றுவகைப்பட்ட ஆசாரிய மூர்த்தியையும், தீக்ஷாக் கிரமங்களையும், பதமுத்திகளையும், சாயுச்சியத்தையும், சுத்தாவே சுதேசியுமல்ல பரிபூரணனுமல்ல பூவிற்கந்தம்போலப் பக்குவங் களிலே பிரகாசிப்பனென்னு முறைமையையும், அவன்கிருபா மூர்த்தியென்னு முறைமையையும், சர்வத்தையுங் கூடிநிற்கச் செய்தே தானென்றேடுந் தோய்விலனென்னு முறைமையையு மறிவித்தது. (க)

இப்படிச் சிவரூபத்தைத் தரிசித்துக் கூடுமுறைமையெப்ப டியென்ற மாணவகனைநோக்கி யருளிச்செய்கிறார்,

தம்மிற் றலைப்பட்டார் பாலே தலைப்பட்டுத்
தம்மிற் றலைபடுத ருமுணரிற்-றம்மி
னிலைப்படுவ ரோரிருவர் நீக்கிநிலையாக்கித்
தலைப்படுவர் தாமத் தலை.

இ-ள், தம்மிற்றலைப்பட்டார் பாலேதலைப்பட்டு=தந்தாமி டங்களிற் பக்குவமறிந்து எழுந்தருளிவந்த ஆசாரியனிடத்திலே தாமுங் கூடிவழிபட்டு,—தம்மிற்றலைபடுதருமுணரில்=ஆசாரிய னனுக்கிரகத்தாலே முன்பு தாளுக வபிமானம்பண்ணி யிருந்த

தேகாதிகளைத் தமக்கு வேறென்றறிந்து நீக்கித் தம்மையுந் தரிசித்துத் திருமேனிகொண் டெழுந்தருளிவந் துணர்த்தினதம்பிரானார் தம்மிடத்திலேநின்று பிரகாசிக்கிற முறைமையுந்தாமறியப் பட்டு.—தம்மினிலைப்படுவரோ ரிருவர்=தம்மிடத்திலே யநாதியே தோன்றாமல்நின்று நடத்திப் பக்குவமாக்கி யந்தப் பக்குவத்திலே யிப்படித் தரிசிப்பித்த விந்தஞானநேயங்களாகிய சத்திசிவமான விரண்டுமுதலுந் தோன்றாநிற்கும்,—நீக்கிநிலையாகத்தலைப்படுவர் தாமத்தலை=இப்படி தரிசிக்கிறோமென்கிறதன்னுடையசுட்டானபோதத்தைவிட்டு அஞ்ஞானத்திலே பொருந்திநிற்கிலப்பொழுதே யந்தஞேயசொரூபமாகிய சிவமுங்கூடி யந்தச் சிவமாகியே பிரகாசியாநிற்பர். (உ)

இந்தவவதாரத்தை யடியேனுக்குக் கடாக்ஷித்தருளவேணுமென்ற மாணவகனைநோக்கி யருளிச்செய்கிறார்.

என்னறிவு சென்றளவில் யானின்றறிந்தபடி
யென்னறிவி லாரறிக வென்றொருவன்-சொன்னபடி
சொல்லக்கேளென்றொருவன் சொன்னா னெனக்கதனை
சொல்லக்கே ணானுனக்குச் சொல்.

இ-ள், என்னறிவு—சொல்=ஆசாரிய னனுக்கிரகத்தாலே யென்னுடைய பசுஞானம்போனவளவில் நானந்தவவதாரத்திலே நின்றனுபவிக்கிறபடி யெப்படியெனில்? பசுஞானம்போய்ச்சிவஞானத்திலே யபேக்ஷையுண்டானவர்க ளறியுங்களென்று ஒரு பரமாசாரிய னருளிச்செய்தபடியே சொல்லக்கேளென் றெனக்கொரு பரமாசாரிய னென்னுடைய பக்குவத்துக்கீடாகப் பாரம்பரியம்போல வோருபாயமாக வருளிச்செய்தான், அந்த வவதாரத்தை யந்தமுறைமையிலே நான்சொல்லமாணவகனே நீபுத்திபண்ணிக்கேட்பாயாக. (௩)

பசுஞானம்போய்ச் சிவஞானத்திலேநின் றநுபவித்தபடி யேகேளென்றுசாரிய னருளிச்செய்கையா லாசாரியனுமான்மாக் களி லொருவனேயென்ற மாணவகனைநோக்கி யருளிச்செய் கிறார்.

அகளமய மாய்நின்ற வம்பலத்தெங் கூத்தன்
சகளமயம் போலுலகிற் றங்கி - நிகளமா
மாணவ மூல மலமகல வாண்டனன்காண்
மாணவக வென் னுடனாய் வந்து.

இ-ள். அகளமயமா நின்ற வம்பலத்தெங்கூத்தன் சகள மயம்போலுலகிற்றங்கி = திருவம்பலத்தே ஞானமயனாயாநந்த நிருத்தஞ்செய்தருளுகிற வெம்முடைய சுவாமி தன்னுடைய கா ருண்ணியத்தின் மிகுதியாலே யென்னுடைய பிறவித்துன்பத் தைப்போக்கும் பொருட்டாகவெனக்குஞானக்கண்ணில்லாமை யினாலே யூனக்கண்ணுக்குத்தோன்ற விலங்கு சாதிகளை யுபாய மாகப்பார்வையிட்டுப் பார்வை பிடிப்பாரைப்போலச் சர்வமுந் தனக்குத் திருமேனியாகையா லென்னைப்போலச் சகளீகரித் தாற்போல விசுவத்தி லொருதேகிபோலத்தோன்றி - நிகளமா மாணவமூலமலமகலவாண்டனன்காண் மாணவகவென்னுடனாய் வந்து = மாணவகனே, ஆன்மாவையும் மாயாதேகத்தையுங் கூட்டிப் பிணிக்குக்காரணமான விலங்காகியகன்ம முண்டாம் படி நிற்கிற வாணவமலமாகிய மூலமலம் விட்டுப்போம்படி யநாதியே யென்னைவிட்டு நீங்காமல்நின்று மிப்பொழுது பக்கு வப்பட்ட வவதரத்திலே யிப்படித் திருமேனிகொண்டெழுந் தருளிவந்து என்னுடைய பிறவிநோய்க்கீடாக வுபாயமாகவே அவனே சங்காரங்களினாலே பேதித்தடிமைகொள்ளும் பொரு ட்டாகவிப்படி யருளிச்செய்ததொழிந்து வாக்குமநாதீதகோசர மாயுள்ளசிவ னான்மாவாவானே. (௪)

இப்படிப்பட்டவிவன் திருமேனிகொண்டிரக்ஷிக்கவேண்டுமோ தானே யிரக்ஷிக்கமாட்டானோவென்ற மாணவகனைநோக்கி யருளிச்செய்கிறார்.

ஆகமங்க ளெங்கே யறுசமயந் தானெங்கே
யோகங்க ளெங்கே யுணர்வெங்கே - பாகத்
தருள்வடிவுந் தானுமா யாண்டிலனே லந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு.

இ-ள். ஆகமங்களெங்கே - பேசு = எனக்காதியே தொடங்கி விடியாமல்நின்ற பேரந்தகாரமான வாணவமலம் பக்குவப்பட்டபடியறிந்து பாமேச்சுரன் தன்னுடையவருளாலே திருமேனிகொண் டெழுந்தருளிவந்து என்னுடைய மலமாயாதி கன்மங்களையும் விடுவித்து என்னையு மென்னுடைய சுதந்தரவீனத்தையு மறிவித்துத் தன்னுடைய வடிமைகொண்டு ரூபசொரூபங்களையு மெனக்கேற்கத் தெளிவித்துத் தன்னுடைய பரமாநந்தபோகத்திலே யென்னைத் திருத்தியடைவித்து அடிமைகொண்டிலனாகில் அவனுடைய எல்லைப்படாத சொரூபத்தை யறியவல்லார்யார், அதனை யநாதியே சொல்லப்பட்ட வாகமங்களுமதிலே வகுப்புண்டவாறு சமயங்களு மந்தச்சமயங்களில் முடிந்தபொருளின் யோகங்களு மிவற்றை யறியத்தக்க விவேகஞானங்களு மென்செய்யவற்று, இதனை விசாரித்துச்சொல்லாய். ()

ஆனால் சாத்திரத்தால் பிரயோசன மொன்றுமில்லையோ வென்ற மாணவகனைநோக்கி யருளிச்செய்கிறார்.

சாத்திரத்தை யோதினர்க்குச் சற்குருவின் றன்வசன
மாத்திரத்தே வாய்த்தவளம் வந்துறுமே - யார்த்தகடற்
றண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாயிதனைச் செப்பு.

இ-ள். சாத்திரத்தை யோதினர்க்குச் சற்குருவின் றன் வசனமாத்திரத்தே வாய்த்தவளம் வந்துறுமே = உபதேசமின்றியே சாத்திர மாத்திரமே யோதினுல் திருமேனிகொண்டெழுந்தருளி வந்த ஞாஞசாரியன் கருணையாலே யுபதேசிக்கத்தக்க சத்தான வார்த்தையிலே பெரிய பிரயோசன முண்டாகமாட்டாது. அதென்போலவெனில், - ஆர்த்தகடற்றண்ணீர் குடித்தவர்க்குத்தாகந்தணிந்திடுமோ தெண்ணீர்மையாயிதனைச் செப்பு = ஆரவாரத்தையுடைய கடலில்நீர் பெரிதென்றிதனை மிகவுங்குடித்தாலு மொருசற்றுந் தாகந்தணியாது, அந்தக்கடலினீர் மேகத்தின் கைப்பட்டுவந்தபொழுதே குறைந்தசலத்திலே மிகுந்ததாகந் தணியாநிற்கும் அதுபோலச் சாத்திரமுங் குருமுகத்தாலே பெற்ருலொழிந்து பிரயோசனமாகாது, தெளிந்த நீர்மையினையுடையா யிதற்குச் சந்தேகமுண்டாயிற்சொல். (சு)

ஆசாரியனுமெமைப்போல வோருடம்பிலே நின்றதற்குத் தக்க கிருத்தியங்களுஞ்செய்து நிற்கச்செய்தேயும் ஆன்மாக்களுடைய மலங்களைப்போக்கிச் சுத்தஞானத்தைப் பிரகாசிக்கவல்ல சாமார்த்தியத்தை யுடையனேவென்று மையப்பட்ட மாணவனை நோக்கி யிதனை யின்னமும் விளங்கவருளிச்செய்கிருர்.

இன்று பசுவின் மலமன்றே யிவ்வுலகி
னின்ற மலமனைத்து நீக்குவதிங் - கென்று
முருவுடையா னன்றே யுருவழியப்பாயு
முருவருள வல்லா னுரை.

இ-ள். இன்று பசுவின் மலமென்றே யிவ்வுலகினின்ற மலமனைத்து நீக்குவதிங்கு = இந்தலோகத்தி லெல்லாமலங்களையு மிப்பொழுது பசுவின் மலத்தாலல்லவோ போக்கப்பட்டது;—

என்றுவுரு வுடையானன்றே யுருவழியப்பாயுமுரு வருள வல்லா னுமா = ஆனல் அநாதியே கூடிப்போதுகிற தேகாதிகளா னது பக்குவப்பட்ட வான்மாக்களுக்கில்லை யாய்விடும்படி பொருந்தப்பட்ட சுத்தரூபமான ஞானத்தைப் பிரகாசிக்கவல்ல சாமர்த்தியர் திருமேனிகொண் டெழுந்தருளிவந்த வாசரியனுக் கொழிந்து வேறொருவர்க் குண்டாகிற்சொல். (எ)

இப்படிக்கொத்த ஞானசரியன் பிரசாதத்தைப்பெற்றவர் கள்பெருமை யருளிச்செய்கிறார்.

கண்டத்தைக் கொண்டு கரும முடித்தவரே
யண்டத்தி னப்புறத்த தென்னுதே - யண்டத்தி
னப்புறமு மிப்புறமு மாரறிவுஞ் சென்றறியு
மெப்புறமுங் கண்டவர்க ளின்று.

இ-ள், கண்டத்தைக் கொண்டு கரும முடித்தவரே = அநாதியே பூரணனாய்த் தோன்றாமல் நின்ற சிவன் காருண்ணியத்தினாலே நம்மைப்போலே யெழுந்தருளிவந்த வாசாரிய மூர்த்தியையு மவனாலே யிதுநானல்லவா யிருந்ததென்றுகண்ட தன்னுடைய வுடம்பையு மிந்தவுடம்பை வேறென்றறிவிக்க வறிந்த தன்னையுமாகப் பதி - பசு - பாசமென்று சொல்லப்பட்ட விந்த மூன்றுபொருளையுங்கண்டு வுட்கொண் டிதனாலே கன்மத்தை முடித்தவர்களே. (இதனாற் கன்மத்தை முடித்தபடி யென்னெனில் கன்மமானது சஞ்சிதமென்றும் பிராரத்தமென்று மாகாமியமென்று மூன்றுவகைப்பட் டிருக்கையாலிதனை யாசாரியனாலே தீக்கையிலே யத்துவாசோதனை பண்ணுகையினாலே சஞ்சிதமான கன்மத்தையும் தேகமுள்ளளவும் பிராரத்தமுண்டாகையா லிந்த தேகத்துடனே கூடப்பிராரத்த மானகன்மத்தையும் அவனருளிச்செய்த வுபாயத்திலே தானின்று மாகாமிய கன்மமேறாமலும் போக்கினதத்துவஞானிகள்) அண்டத்தினப்

புறத்ததென்றதே = அந்த ஞானசொரூபத்தை யண்டத்துக்குள்ளேயென்றும் புறம்பேயென்றுங் கொள்ளாமல் - அண்டத்தினப்புறமுமிப்புறமுமாரறிவுஞ்சென்றறியும் = அந்த ஞானதத்துவாதீதமாயிருக்கிற முறைமையு மந்தத்தத்துவங்களுக்குத் தத்துவமாய் நிற்குமுறைமையு மான்மாக்களுக் கான்மாவா நிற்குமுறைமையுமுணர்ந்து தாமு மிந்தப்பரிபூரணமான ஞானமேயாய்நிற்கவே யவர்களுக்கிந்த ஞானத்திலைக்கியத்தாலே யிப்படியானேமென்கிற கருத்துமழியாமனிற்கும், அப்பொழுதேயவர்கள் சிவமாயே நிற்பர்கள்,—எப்புறமுங் கண்டவர்களின்று = அவர்களே இப்பொழு தெல்லாப்பொருள்களையு முணர்ந்து பரிபூரணமாய்நிற்கிற கலியாணர்கள். (அ)

அந்தச் சிவசொரூபந்தா னெப்படியிருக்குமென்ற மாணவகனை நோக்கி யருளிச்செய்கிறார்.

அன்றுமுத லாரே னு மாளா யுடனாகிச்
சென்றவர்க்கு மின்னதெனச் சென்றதிலை-யின்றிதனை
யெவ்வா றிருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகே
னவ்வா றிருந்ததது.

இ - ள். அன்றுமுதலாரேனு மாளாயுடனாகிச் சென்றவர்க்குமின்னதெனச் சென்றதிலை = அநாதியே தொடங்கி யீஸ்வரனுடைய வேலையினாலே சிருஷ்டி திதிகளுக்குக் கத்தாவுமாய்ப் பின்பு சங்காரகாலத்திலே யீஸ்வரனிடத்திலே கூடத்தக்க பிரமவிஷ்ணுக்களு மவனுடைய வுண்மையான சுரூபமிப்படியேயிருக்குமென்று மின்றளவுந் தெரிந்ததில்லை,—இன்றிதனை யெவ்வாறிருந்ததென் றெவ்வண்ணஞ்சொல்லுகே னவ்வாறிருந்தது= அவர்களாலு மறிதற்கரிய விந்தப்பொருளை யிப்பொழுதெப்படியிருக்குமென்று மெந்தரூபத்தையுவமித்துச்சொல்லுவே னந்தப்

பொருளை யாவர் சிலர்கூடி யநுபவித்தவர்களுக் கெப்படியிருந் ததோ வப்படியே யிருக்கும். (கூ)

இன்னமு மிதனைவிளங்க வருளிச்செய்கிருர்.

ஒன்றுங் குறியே குறியாத லாலதனுக்
கொன்றுங் குறியொன்றி லாமையினு - லொன்ருே
டுவமிக்க லாவதுவுந் தானில்லை யொவ்வாத்
தவமிக்கா ரேயிதற்குச் சான்று.

இ-ள். ஒன்று—சான்று = இந்தப்பொருளுக்காதியே தொடங்கித் தான்பிரிந்தனில்லாம லதுவதுவாய் நிற்கிறதே யடையாளமாதலா லிதுவொழிந்த மந்தப்பொருளுக்கு வேருே ரடையாளமுமில்லையாகையாலே யொருபொருளுடனுவமித்துச் சொல்லுதற் கிதற்கொப்பபான தொருபொருளுமில்லை, ஆகலா விப்பொருளாகாதியே யிரண்டறநிற்கு முறைமைபோல விடையருதே யிரண்டறநிற்குஞ் சிவாநுபவத்தையுடைய சிவயோகி களே யிதற்குச்சாக்ஷி. (ம)

இப்படிப்பட்ட ஞாதாக்களுக்குப் பிராரத்தத்தாலே தேக முள்ளளவு மிந்திரியாதிகள் சீவியாதோ? இவர்களிடைவிடா மற் சிவனை யநுபவிக்கிறபடி யெப்படியென்ற மாணவகனை நோக்கி யருளிச்செய்கிருர்.

ஆற்ருலலைகடற்கே பாய்ந்தநீ ரந்நீர்மை
மாற்றியவ் வாற்ருன் மரித்தாற்போற் - ருேற்றிப்
புலன்களெனப் போதம் புறம்பொழியு நந்த
மலங்களற மாற்றுவிக்கும் வந்து.

இ-ள். ஆற்ருலலைகடற்கே பாய்ந்தநீரந்நீர்மை மாற்றியவ் வாற்ருன்மறித்தாற்போல் = ஆற்ருலேசென் றலையையுடைய

கடலிலே கூடியநன்னீர் கடல்நீருடனே யொன்றாய்த்தன் மைகெட்டு மீண்டுமந்தவாற்றாலே நெடுந்தூரமெதிர்த்தாலு முன் புபோல நன்னீராகாம லந்தவுப்புநீரேயானாற்போல,— தோற் றிப் புலன்களெனப் போதம் புறம்பொழியும் = ஞானத்தாலே சிவனைக்கூடிச் சிவமாயிருக்கிற சிவயோகிகளுக்குப் பிராரத்தத் தாலே யனுபூதிதிரிந்தாலுங் கண்டவர்களுக்கு மிந்திரியங்கள் சேிப்பதுபோலத்தோன்றி யவர்களுக்குச் சுசுரூபத்திலக்கியத் தாலே பசுகரணங்கூடாமல் சிவகரணமே பிரகாசியாநிற்கும்.— நந்தமலங்களற மாற்றுவிக்கும் வந்து = இவ்வளவேயன்றியுந் தரிசனமாத்திரத்திலே யவர்கள் கருணையானது நம்முடையமல ங்கள் நில்லாதபடியும்போக்கி நம்மையுமிரக்ஷியாநிற்கும். [௬௧]

இதற்குப் பிரமாணமுண்டோவென்னில், சிவகரணம் பிர காசித்த சிவஞானிகளிடத்திலே விளைந்த விசேஷங்களை யொரு செய்யுளிலே பல பிரமாணங்களையு மருளிச்செய்கிறார்.

பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங்
காலனை யன்றேவி காரங்கொண்ட - பாலன்
மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தங்
கரணம்போ லல்லாமை காண்.

இ - ள். பாலை—காண் = சிவனுடைய வருளாலேசிவனைப் பெற்ற நாயன்மார் பாலைநிலம் நெய்தல் நிலமாகப்பாடியதும், பாம்புகடித்துமரித்தவன் பிராணன்பெற் றெழுந்திருக்கும்படி பாடியதும், பக்குவத்திலே காலனையேவி முதலைப்பிடித்து மரித்த புதல்வனைக் காலத்தைப்போக்கி யழைப்பித்ததுவும் மாணவகனே? யவர்களுக்கு நம்மைப்போலப் பசுகரணமாக வேசேிியாமல் சிவகரணமாகவே யிருத்தலால்காண். [௬௨]

இந்தவத்தம் பெற்றவர்களெல்லார்க்கு மிப்படி விசேஷஞ் செய்யுமோவென்ற மாணவகனைநோக்கி மிகுந்த சத்திநிபாத முடையவர்க்கே யிவையுண்டாமென் றருளிச்செய்கிறார்.

தூங்கினரைத் தூய சயனத்தே விட்டதற்பின்
றூங்கவே சட்ட வுறங்குவர்க - ளாங்கதுபோ
லைய னருட்கடைக்க ணுண்டதற்பி னப்பொருளாய்ப்
பைய விளையுமெனப் பார்.

இ - ள். தூங்கி—பார் = சுகதுக்கவேதனைகளிலே மிகவு மொத்துண்டானொருவனுக் கறிகருவிகள் நீங்கி மயக்கம்வந்தடுத்தகாலத்திவனளவி லன்புடையவர்கள் நன்றாகப்படுத்த சயனத்திலே யவர்கள் கூடியபின் தன்னையும் பிரபஞ்சத்தையுமறக்கத் தக்க பேருறக்க மவர்கள் கூட்டவேண்டுவதன்றியே தன்னிடத்திலே யதுதானே யுண்டாகாநிற்கும். அந்த முறைமைபோலச், சரிதைகிரியாயோகங்களின் முற்றுதலாலே மிகுத்த சத்திநிபாதமுண்டாயவர்க ளந்த மூன்றுபாதத்தையு நிகழ்த்திப் பிரபஞ்சத்தையும் விட்டு ஞானத்திலே யபேக்ஷை யுடையாரென்னை யிரக்ஷிக்கைக்கு ஞானாசாரியனை யெங்கே பெறுவேனென்று மிக்கத் தேட்டத்துடனே சென்றடைய அவன்மீது ஆசாரியனு மிகுந்தவன்பைவைத்து ஞானதீக்ஷாக் கிரமங்களிலே மலமாயாதிகன்மங்களைப்போக்கி யான்மா வினுண்மையையுணர்த்தி யிவனுடைய சுதந்தரவீனத்தையுங்காட்டி ஞானத்தையுந் தரிசிப்பித்து இதிலே யொருதன்மையாகியபினந்தஞானத்தி னைக்கியத்தாலே தன்னைம் பிரபஞ்சத்தையு மறப்பிப்பதான வந்தச்சிவசொரூபந்தானே பிரகாசித்தொரு நீர்மையாகவே யெல்லாவிசேஷங்களும் விளையாநிற்கும், நீயுமிப்படி யிந்தத்திருஷ்டியிலே நிற்பாயாக. (௧௫)

இனியிந்த வவதரத்திலே யிவன்நிலைநிற்கும் படியையின்னமுவிளங்க வருளிச்செய்கிறார்,

உள்ள முதலனைத்து மொன்ற வுருகவரி
லுள்ள முருகவந் தன்னுடனாந் - தெள்ளி
யுணருமவர் தாங்க ளுளராக வென்றும்
புணரவர நில்லாப் பொருள்.

இ-ள். உள்ள முதலனைத்து மொன்ற வுருகவரி லுள்ளமுருகவந் தன்னுடனும் = மாணவகனே? ஆன்மாவுக்குப் பிரபஞ்சவேதுவாயுள்ள தத்துவங்களு மலங்களுமாயுள்ளவை கடாக்ஷத்தாலே யிவை யொருவழிப்பட வில்லையாய் விடும்படி ஞானம் பிரகாசிக்கி லந்தஞானத்தி னைக்கியத்தாலே யிப்படிப் பெற்றோமென்கிற வுன்னுடைய கருத்தானதழியும்படி யப்பொழுதேசிவம் பிரகாசித் துன்னையொரு நீர்மையாக்கிக் கொள்ளா நிற்கும் தெள்ளி யுணருமவர் தாங்க ளுளராக வென்றும் புணரவர நில்லாப்பொருள் = இப்படி யொழிந்து சிவனை யாராய்ந்தறிய விசாரிக்குமவர்கள் தங்கள்பாவனை குலையாது நிர்கச் சிறிதே யறிந்துகூட விசாரிக்கி லவர்களுக் கெப்பொழுதும் பொருந்துகைக்கு முன்னில்லா தந்தப்பொருள். (கச)

இந்தப் பதினாலுவெண்பா உபதேசத்தின் முறைமையாகையால், இதற்குப் பிரமாணமாகத் திவ்வியாகமங்களைத் தம்பிரானாருளிச்செய்த வடைவே யான்மாக்களுக் கநாதியாய்வருகிற சனனமரணங்களுஞ் சுகதுக்கங்களும் ஞானத்தா லல்லது போகாதாகையா லிந்தஞான முண்டாகும் பொருட்டுப் பக்குவங்களுக்கீடாக வாசாரியர் கடாக்ஷத்தாலே சரிதைகிரியா யோகங்களைச்செய்து, இதின் முற்றுதலாலே ஞானாசாரியனை வழிபட்டு ஞானோபதேசத்தைப் பெற்று, ஞானத்தி னைக்கியத்தாலே சிவனைப்பெற்று முத்தராம்படியும், இந்த ஞானங்கூடாமல் முற்பட்டவளவுகளிலே நின்றவர்கள் பதமுத்திப் பெறும்படியும்,

இவற்றைச் சுருங்கக்கொண்டு சரிதையையுங் கிரியையு மொ ன்ருக்கிச் சிவதன்மமென்றும, யோகத்தைச் சிவயோகமென்று ம், ஞானத்தைச் சிவஞானமென்றும் நாலுபாதத்தை யொன்ரு க்கி யிவற்றிலே சாதிக்கு முபாயங்களையும் பேறுகளையு மருளிச் செய்கிருர்.

நல்லசிவ தன்மத்தா னல்லசிவ யோகத்தா
னல்லசிவ ஞானத்தா னுனழிய - வல்லதனு
லாரேனு மன்புசெயி னங்கே தலைப்படுங்கா
ணாரேனுங் காணு வரன்.

இ-ள். நல்ல—வரன் = சிவனைக் கர்த்தாவாகக் கொள் ளாத சமயங்களுடனே நின்று சாதித்துக்கெடாத குற்றமற்றசிவ னை நோக்கின சைவசித்தாந்தத்திற் சிவதன்மத்தாலேயாதல், சி வயோகத்தாலேயாதல், சிவஞானத்தாலேயாதல், சிவனைக் கூடு ம்படி சாதிக்குமவர்கள் தங்களாலே செய்யப்பட்டதாகக்கருதா தே கத்தாவி னேவலென்றே யறிந்து தம்முடைய சுதந்தரத் தைவிட் டவன்கைப்பட்டு வரவல்லார் யாவர் சில ரவர்க ளந்த க்கத்தாவின்மேலே மிக்கவன்பைவைக்கி லவ்வவரிடங் களிலே சென்று தலைப்படாநிற்பன் மாணவகனே ? பிரம விஷ்ணுக்க ளின்றளவுங் காணப்படாத சிவன். (௰௫)

இந்தவெண்பா மூன்றுவகைக்குங்காட்டும் இந்த மூன்று வகையிலு முர்பட்ட சிவதன்மத்தையறிந்து வழிபடுவார் வழி படும்படியேநின்ற மாணவகனைநோக்கிச் சிவதன்மத்தை மெல்வி னையென்றும் வல்வினையென்று மிரண்டாக்கி யிந்தமுறைமையி லே யருளிச்செய்கிருர்.

மெல்வினையே யென்ன வியனுலகி லாற்றரிய
வல்வினையே யென்ன வருமிரண்டுஞ் - சொல்லிற்
சிவதன்ம மாமவற்றிற் சென்றதிலே செல்வாய்
பவகன்ம நீங்கும் படி.

இ-ள், மெல்வினை—நீங்கும்படி = மெல்வினையென்று மு லகத்தாரால் செய்தற்கரிய வல்வினையென்றுஞ் சிவனை வழிபட த்தக்க விந்த விரண்டுவகையுஞ் சொல்லு மிடத்துச் சிவதன்ம மென்றே சொல்லப்படுமாதலால் இவை யிரண்டினு முன்னு டைய கருத்துக்குப் பொருந்தினதொன்றை வேறொரு பலன்க ளையுங் கருதாதே செய்வாயாக, மாணவகனே? யுன்னுடையபிற ப்பாகியவினை விட்டு நீங்கும்படி இதனாற்சொல்லிய பலன்களை க்கருதிப் பதங்களையடையாமல் சாயுச்சியமே பெறுகைப் பொ ருட்டாக வுண்மையான சிவஞானத்தைப் பெறவேணு மென்று கருத்து. (யசு)

இந்த விரண்டு வகையில் முற்பட்ட மெல்வினையின்மு றைமை யருளிச்செய்கிறார்.

ஆதியை யர்ச்சித்தற் கங்கமு மங்கங்கே
தீதி றிறம்பலவுஞ் செய்வனவும் . வேதியனே
நல்வினையா மென்றே நமக்குமெளி தானவற்றை
மெல்வினையே யென்றதுநாம் வேறு.

இ ள். ஆதியை—வேறு = வேதியனே யாகமங்களி லரு ளிச்செய்தபடியே சிவனை யுள்ளபடி யர்ச்சித்து வழிபடத்தக்க கி ரியாவிதிக்குப் பக்குவனும்படி இவனுடைய வவயவங்களினலே யந்தந்த வவதாரங்களிலே செய்யத்தக்க திருவலகு, திருமெழுகு, திருவிளக்கு. திருநந்தனவனம், திருப்பள்ளித்தாமம், திருமஞ்ச னம், திருமாலை, கூத்து, பாட்டு, முதலாயுள்ள தொழில்களும், திருவேடத்தாரை வழிபடுகையும், சிவபத்தருக்கு வேண்டுவன செய்கையும், திருமந்திரம் சமிக்கையுமாக விப்படியே செய்யப் பட்ட குற்றமற்ற வழிபாடான சரிதையும், இந்தச்சரிதையின் மு திர்ச்சியாலே திருவுள்ளத் தடைத்துச் சிவனையர்ச்சித்து வழிப டுகிற கிரியாவிதியும், நல்ல செயற்பாடென்று நமக்கெளி தாகச்

செய்யலாகையாலே யிவை யிரண்டையு மெல்வினையென்று திவ்வியாகமங்களிலே சொல்லப்பட்ட படியாலே நாமு மிதனை யுனக்குச்சொன்னோம். வேதியனே யென்றது இந்தச் சரிதைகிரியையிலேநின்று வழிபடுகிற வளவில் கொலை, களவு, கள், காமம், பொய்யென்கிற வைந்தையும் விட்டு நிற்கையாலும், வாக்கு மனங் காயங்களால் நினைப்பன, சொல்வன, செய்வன, வெல்லாந் தெய்வ கிருத்தியத்தினாலே யாகையாலும், சுத்தத்திலே நின்றும் நீங்கிச்சுத்தனாய் நிற்கையாலும் சர்வான் மாக்களையுந் தன்னைப் போலேகாண்கையாலும், வேதாகமங்களின் முறைமைகளிலே வழுவாமல் நிற்கையாலும். இவனை வேதியனே யென்று ஆசாரியனாலே யழைக்கப்பட்டது.

இந்தச் சரிதையுங் கிரியையும் மெல்வினையாக்கி இந்தநிலைகளின் முதிர்ச்சியாலே பின்புண்டான சநநத்திலே சிவனளவிலே மிகுந்த சிநேகமா யிவனுக்கு விளைந்த வல்வினை யிருக்கும்படியே யருளிச்செய்கிறார்.

வாங்கள் தருஞ்செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினா லன்றுகறி யாக்க - விரங்காதே
கொல்வினையே செய்யுங் கொடுவினையே யானவற்றை
வல்வினையே யென்றதுநா மற்று.

பாதக மென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டுஞ் - சேதிப்பக்
கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
தண்டீசர் தஞ்செயலாற் றான்.

செய்பி லுகுத்த திருப்படி மாற்றதனை
யைய் விதுவமுது செய்கென்று - பையவிருத்
தூட்டி யறுத்தவர்க்கே யூட்டி யறுத்தவனை
நாட்டியுனை செய்வதென்னோ நாம்.

ஆக விந்தமூன்றுதிரு வெண்பாவிலுள்ள முறைமைகள் சாத்திரங்களிற் சொன்னவழியன்றியே யளவற்றவன்பின் பெருமையாலே யுலகத்தியற்கைவிட்டு யாவராலுஞ் செய்யவொண்ணாத செயல்களைச் செய்ததாகையா லிதனை யொருபிரமாணங்களால் சொல்ல வரிதாகையாலே வல்வினையென்று சொல்லப்பட்டது. (உ௰)

இப்படிக் கொடித்தான வல்வினைகளைச் செய்யுமவர்களு முத்தியைப்பெறுவார்களோவென் றறையப்பட்ட மாணவகனை நோக்கியருளிச்செய்கிறார்,

செய்யுஞ் செயலே செயலாகச் சென்றுதமைப்
பையக் கொடுத்தார் பரங்கெட்டா - ரையா
வுழவுந் தனிசு மொருமுகமே யாறு
லிழவுண்டோ சொல்லா யிது.

இ - ள். செய்யுஞ்செயலே செயலாகச்சென்று தமைப்பையக்கொடுத்தார் பரங்கெட்டார் = இப்படித்தான் கொடிதான வல்வினைகளைச் செய்யச்செய்தே யிந்தக் கொடியசெய்திகளா லகிதம்வாராமற் சிவனை நோக்கியேநின்று சிவனளவில் வைத்தவன்பின் பெருமையாலே யிந்தச்செயல்களையு முறைமையான செயலென்றேகொண்டு தம்மையு மெள்ளச் சிவன் கையிலே கொடுத்துப் பரங்கெட்டு விடுகையாலே யவர்கள் கர்த்தாவின் கைப்பட்டு முத்தியைபெறு நிற்பர்கள்;—ஐயா வுழவுந்தனிசுமொரு முகமேயாறு லிழவுண்டோ சொல்லாயிது = ஐயனே? யொருவனுக் குழவோரிடத்திலுந் தனிசோரிடத்திலுமாறு லொன்றுக்கொன் றுதவிகூடாது, அவை யிரண்டுமோரிடத்திலேயாறு லிவன் சுத்தனுய்விடுகை சந்தேகமில்லை. அதுபோலச் செய்கிறசெயல்களி லகிதம் வாராமற் சிவனை நோக்கியே செய்தும் இந்தச் செயல்களுஞ் சிவன் செயலென்றேகொண்

டு தம்மையு மவன்கையிலேகொடுத்துப் பரங்கெட்டு விடுகை யாலே யிவன் பெறுகிறமுத்திக்கு மிழவுண்டாகுமோ விதனை விசாரித்துச்சொல்லாய். (உக)

இனிச் சரியைகிரியைகளிலேநின்று சாதித்தவர்க்கும் பிற் பட்ட சகத்தி விப்படிமுதிர்ந்த வல்வினைகூடாமல்யோகத்துக் கதிகாரியானவனுக்கு யோகம் வெகுவிதமாகையினாலே விதனை ச் சுருங்கக்கொண்டு ஆதாரயோகமென்றும் நிராதாரயோகமெ ன்றும் உத்தமமானயோகங்களை யெடுத்தருளிச்செய்கிறார்.

ஆதார யோக நிராதார யோகமென
மீதானத் தெய்தும் விதியிரண்டே - யாதாரத்
தாக்கும் பொருளாலே யாக்கும் பொருளாமொன்
றாக்காப் பொருளேயொன் றாம்.

இ - ள். ஆதாரயோக நிராதாரயோகமென மீதானத் தெய் தும் விதியிரண்டே = ஆதாரயோகமென்று நிராதாரயோகமெ ன்று மெல்லாவற்றிற்கு மேலானவிடமாகிய திருவடியிலே பக் குவப்பட்ட ஆன்மாக்கள் பொருந்தும்படி சாதித்துக்கூட்டுகை க்கு வேதாகமங்களிலெ விதிக்கப்பட்ட திரண்டு பிரகாரமாயி ருக்கும்.— ஆதாரத்தாக்கும் பொருளாலேயாக்கும் பொருளா மொன்று = ஆதாரங்களிலே யொவ்வொரு திவ்யருபங்களை யாசாரியனிடத்திலேபெற்று அந்தத்தானங்களிலே தியானித்தி ருக்கத்தக்க வாதாரயோகமொன்று —ஆக்காப்பொருளே யொ ன்றாம் = இந்த வாதாரயோகங் கைவந்தவாறே யாதாரங்களில் பார்த்திருக்கும்படி சற்பித்துக்கொண்டு நிற்கிற சைதன்னிய சொருபத்தைப்பாராதே பார்த்துநிற்கிறது நிராதாரயோகம். ()

இந்தத் திருவெண்பா வாதாரயோகத்துக்கு நிராதாரயோகத்துக்குங் காட்டாகையி லிதில் முன்னே சொல்லப்பட்ட வாதாரயோகத்தை மேல்விளங்க வருளிச்செய்கிறார்.

ஆக்கி யொருபொருளை யாதாரத் தப்பொருளை
நோக்கி யணுவி லணுநெகிழப் - பார்க்கி
லிவனாகை தானொழிந்திட் டேகமா மேகத்
தவனாகை யாதார மாம்.

இ - ள். ஆக்கியொருபொருளை யாதாரத்து = தேகத்திலே கற்பிக்கப்பட்ட வாறாதாரங்களிலே யாசாரியனருளிச்செய்த தொருதிவ்வியரூபத்தை யிதற்குப்பொருந்தின தோராதாரத்திலே தன்னுடையமனமானது விஷயங்களிற் பற்றும விதிலே பற்றும்படி கற்பித்துக்கொண்டு,—அப்பொருளைநோக்கி = அப்படி கற்பித்துக்கொண்ட ரூபங் கைவரும்படி நெடுநாள் தியானித்து,—அணுவிலணு நெகிழப்பார்க்கி லிவனாகை தானொழிந்திட்டேகமாம் = அந்தத்தியானங் கைவந்தவாறே யந்தவாதாரங்களைவிட்டுத் தன்னிலே யந்தப்பொருளைத் தியானிக்கி லந்தத் தியானத்தின் முறுகுதலாலே தியானிக்கிறோமென்கிற நினைவு கெட்டு அந்தப்பொருளொன்றுமேயாம்,— ஏகத்தவனாகையாதாரமாம் = இப்படித் தியானிப்பானுந் தியானிக்கப்படும் பொருளுமன்றியே தன்னைமறந் தந்தத் திவ்வியரூபந் தானாகநிற்கிறது தானே யாதாரயோகம். (உகூ)

இனி யிந்த வாதாரயோகந் தன்னைச் சூக்குமமாகநுண்ணி தாகச்சாதிக்குமுறைமை யருளிச்செய்கிறார்.

கொண்ட தொருபொருளைக் கோடிபடக் கூறுசெயிற்
கொண்டவனு மப்பரிசே கூறுபடுங் - கொண்ட
விருபொருளு மன்றியே யின்னதிது வென்ற
வொருபொருளே யாயிருக்கு முற்று.

இ - ள்· கொண்டதொருபொருளைக் கோடிபடச் கூறுசெய்யிற் கொண்டவனு மப்பரிசேகூறுபடும் = யாதொன்று தான்கைவரத்தியானித்தபொருளை நுண்ணிதாக நுணிக்கிப் பரமாணுவிலும் நுண்ணியதாகத் தியானிக்கி னிப்படித்தியானிக்கிறவனுந் தியானித்தபொருள்போலப் பரமாணுவினு நுண்ணியதாக நிற்பன்.—கொண்டவிருபொருளுமன்றியே யின்னதிதவென்னுவொருபொருளையாயிருக்குமூற்று = இப்படி நிற்கவே தியானிப்பானுந் தியானிக்கப்படுபொருளுமன்றியே யொருசுற்பனையறவப்பொழுதேயந்த வொப்பில்லாதபொருள் தானேயா யிருக்கும். (உசு)

இனி யிந்த நுண்ணியதான தியானமுங்கரைய வாதாரயோகத்துக்கு முடிந்தயோகமுமா யுபாயயோகமுமா யிருக்கிற மந்திர யோகத்தை யருளிச்செய்கிறார்.

அஞ்செழுத்து மேயம்மை யப்பர்தமைக் காட்டுதலா
லஞ்செழுத்தை யாருகப் பெற்றறிந் - தஞ்செழுத்தை
யோதப்புக் குள்ள மதியுங் கெடிலுமைகோன்
கேதம்ற வந்தளிக்குங் கேள்.

இ - ள். அஞ்செழுத்துமே யம்மையப்பர் தமைக்காட்டுதலால் = அகார-உகார-மகார-விந்து-நாதமென்கிற பஞ்சாக்கரமான பிரணவத்துக்குப் பிரமா - விஷ்ணு - உருத்திர - மஹேசுர - சதாசிவர் இவர்களை வருமதி தேவதையுமாய் - மந்திரமூர்த்திமாய் - ஓங்காரமாயே நின்று நடத்துகையா லிந்தவைந்தெழுத்தே சத்தியையுடைய சிவன் திருமேனிகொண்டு நடத்துகிற முறைமை காட்டுதலால்,—அஞ்செழுத்தை யாருகப்பெற்றறிந்து = இந்தவைந்தெழுத்து மூலாதாரத்திலே அகாரமும் பிரமாவும் - நாபிக்கமலத்திலே உகாரமும் விஷ்ணுவும்-இருதய கமலத்திலே மகாரமும் உருத்திரனும் - கண்டத்திலே விந்து

வும் மஹேஸ்வரனும் - புருவமத்தியிலே நாதமும் சதாசிவமும் இப்படிச்சுழிமுனைவழியாகநிற்கிற முறைமையைக் குருவுபதேசத்தாலேபெற்று இந்தவைந்தெழுத்தையு மூலாதாரத்திலே பிரமரந்தரத்திலே செல்லவுச்சரித்தா லிந்தப் பிரணவ சொரூபமுங்கரைந்து விக்கிரங்களு மொருசீர்மையா யுனக்கு நாதரூபமாய் நாதாந்தத்திலே யருளைப்பெருவையென்று ஆசாரியனருளிச்செய்யவறிந்து,—அஞ்செழுத்தை யோதப்புக்குள்ள மதியுங்கெடில் = இந்த ஒங்காரமான வைந்தெழுத்து முச்சாரணபேதத்திலே நாற்பத்தொன்பதா மெழுத்தும் பதினாலாமெழுத்துமாருமெழுத்து மிவை கூடினவிடத்திலே விந்துநாதமுமாகவிந்த முறைமையிலே யைந்தெழுத்தாமென்றும் வேதாகமங்களிலே விதிக்கையா லிந்தவைந்தெழுத்தையு முன்தத்துவமாக வுச்சரிப்புக்கு விந்துநாதமுடிந்தவிடத்திலே கிஞ்சிஞ்ஞமான ஆன்ம போதமுங்கெடில்,—உமைகோன் கேதமறவந்தளிக்குங்கேள் = அப்பொழுதே சத்திக்குக் கத்தாவாகிய சிவன் குற்றமறத்தோன்றியுண்மையானசொரூபத்திலேகூடி யிரக்ஷியாநிற்பன். இந்தவாதாரயோகத்தைத் தூலசூக்குமமாக மூன்றுபடியாகக் கரைத்த விதபின்பு நிராதாரயோகத்துக்குப் பிராப்தனும்படி யெனவறிக. ( )

இந்த வாதாரயோகங் கைவறச் சாதித்தவர்களுக்குமேல் நிராதாரயோக மிருக்கும்படி யருளிச்செய்கிருர்.

ஆக்கப் படாத பொருளா யனைத்தினிலுந்
தாக்கித்தா னென்ருேடுந் தாக்காதே - நீக்கியுட
னிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனாய்
நிற்கை நிராதார மாம்.

இ - ள். ஆக்கப்படாதபொருளாய் = ஆன்மபோதத்தாற் கற்பிக்கக்கூடாத வர்த்தமாய்,—அனைத்தினிலுந் தாக்கித் தானென்ருேடுந்தாக்காதே = எல்லாப்பொருள்களிலுந் தான்கூடி

நிற்கச்செய்தே யவையொன்ருேடுந்தான் தோயாமல்,— நீக்கி யுடனிற்கும் பொருளுடனே = ஆன்மாவுக்கு முத்திக்கு விரோதமாய் நீக்கத்தக்கபொருள்களையுந் தானேயறிந்து நீக்கிடாதியே யிப்படி நீங்கப்படாத வந்தஞானசொருபத்துடனே,— நிற்கும் பொருளுடனுய்நிற்கை நிரா தாரமாம்=தன்னுடையபோதத்தை யொழிந்து இதனைக்கூடித்தானு மந்தஞானசொருபமா யொரு பற்றறநிற்கி லது நிராதாரயோகமாம். (உசு)

இந்த ஞானத்திலே யிப்படி இரண்டறநிற்கில் சிவனை யுள்ளபடியே காணலாமென் றருளிச்செய்கிருர்.

காண்கின்ற தோர்பொருளைக் காண்கின்ற யோகிகளே
காண்கின்ருர் காட்சியறக் கண்ணுதலைக்-காண்கின்ருர்
காண்பானுங் காணப் படும்பொருளு மன்றியே
காண்கையினுற் கண்டனரே காண்.

இ - ள், காண்கின்ற தோர்பொருளைக்காண்கின்றயோகிகளேகாண்கின்ருர் காட்சியறக் கண்ணுதலை = எல்லாவற்றையுமறிந்தறிவித்துநிற்கிற ஞானத்தை யதுகண்ணுகக்காண் கின்ற சிவயோகிகளே சிவனை யிறண்டறக்காண்கின்ற கலியாணர்கள்,— காண்கின்ருர் காண்பானுங் காணப்படும் பொருளுமன்றியே காண்கையினுற் கண்டனரேகாண் = மாணவகனே, இப்படிக் காண்கின்றவர்கள் தன்னுலே காணப்படாதர்கவும் காணப்பட்டபொருள் தனக்கு வேருகவுங்காணுமல்ந்த ஞானமாகவே நின்று காண்கையாலே யிந்தஞான சொருபமாகவுடைய சிவனை யப்பொழுதே பெற்று வேறற்றிருப்பார்கள். (உஎ)

இனி யிந்த நிராதாரயோகம் நிலைபெறும்படி யிதற்குபாயமான மௌனயோகத்தை யருளிச்செய்கிருர்.

பேசாமை பெற்றதனிற் பேசாமை கண்டனைப்
பேசாமை செய்யும் பெரும்பெருமான் - பேசாதே
யென்ஞென் றும் வண்ண மிருக்கின்ற யோகிகள்பா
லுண்ணின் றும் போகா னுளன்.

இ - ள், பேசாமைபெற்றதனிற் பேசாமைகண்டனரைப் பேசாமைசெய்யும்பெரும்பெருமான் = வாக்கு மனக்காயங்கள் மூன்றினுமட்டுப்படாதது வாக்காகையாலும் மாற்றமுண்டேல் வஞ்சமுண்டென்கையாலும் பேசாமையாகிற பரமோபாயத்தை யாசாரியன் பக்கலிலேபெற்று அத்தப்பேசாமை தன்னுடவா தனையிற்போகாமல் வாக்கு மனங் கிட்டப்படாத சிவனைத் தங்க ளிடத்திலே ஞானதிருஷ்டியாலேகண்டு கூடிச்செயலற்றிருக்கிற சிவயோகிகளைப் பின்பொரு சரீரங்கூடி வாக்குண்டாகாதபடி சநநத்தை வேரறுத்து விடாநிற்பன் சிவன்,—பேசாதே யெண் ணென்றும் வண்ணமிருக்கின்ற யோகிகள்பாலுண்ணின்றும் போ கானுளன் = இப்படி யுரையிறந்து சிவனுடனே யிரண்டற்றி ருக்கிற சிவயோகிகளிடத்துப் பரமேஸ்வர னெவ்விடத்தினும்வி யாத்தமாயினு மவ்விடங்களிலே மறைந்தேநின்றுஇவர்களிடத் தே பிரகாசித்து இவர்க்கேயுடனுமிருப்பன்.— பேசாமையாகிற பரமோபாயத்தை யாசாரியன் பக்கலிலே பெற்றபடி யென்னெ னில் தேகமுதலாயுள்ளவை யுனக்கு வேறென்று மிவற்றுடன் கூடினால் பிறப்புக்குக் காரணமான கன்மமுண்டாமென்று மு னக்கு ஞானமே வழிவென்றுந் திக்கையிலே நாமிசைவிக்க நீயு மிசைந்தாயென்றும் அல்லதூஉம் சரீரம் அத்தம் பிராணனி வை தத்தம் பண்ணினையேயென்றும் நமக்குத் தத்தம் பண்ணி னபொருளை நீ விரும்பக்கடவை யல்லையேயென்று மாசாரியன ருளிச்செய்ய விவனும் நமக்கில்லாதபொருள்களை விரும்பக்கட வோ மல்லவென்று அறுதியிட்டான். (உஅ)

நிராதாரயோகத்துக்குத் தூலசூக்கும பரமாகமூன்று திரு வெண்பா வருளிச்செய்து மேலிந்த பரமாகிய சிவனை யான்ம போத மிறந்தாலொழிந்து கூடவொண்ணாதென்னு முறைமை யைப் பல செய்யுட்களாலும் விளங்க வருளிச்செய்கிறார்.

ஓட்டற்று நின்ற வுணர்வு பதிமுட்டித்
தெட்டற்று நின்ற விடஞ்சிவமா - நாட்டுற்று
நாடும் பொருளனைத்து நானு விதமாகத்
தேடு மிடமன்று சிவம்.

இ - ள். ஒட்டற்றுநின்ற வுணர்வுபதிமுட்டித் தேட்டற்று நின்றவிடஞ் சிவமாம் = ஒருவகைவின்றியே நின்ற பரம ஞானத்தை யதுகண்ணாகக் கண்டுகூடின ஆன்மா வந்தஞான மேயாய்த் தானுமசைவின்றியேநிற்கி ல்ந்தஞானத்தில் நிலையாலே தன்னுடைய வான்மபோதமொழிந் தந்த ஞானமாயே நின்ற விடந்தன்னிலே சிவமே பிரகாசித் தவனையு மொரு நீர்மையாக்கிக் கொள்ளாநிற்கும்,—நாட்டுற்றுநாடும் பொருளனைத்து நானுவிதமாகத் தேடுமிடமன்று சிவம் = இப்படியொழிந்து சுட்டியறியத்தக்க வான்மபோதத்தாலே வெகுவிதமாக வாராய்ந்தறியத்தக்கவிடம் பிரபஞ்ச வியாபாரமாகையாலவ்விடஞ் சிவரூபமாகாது, (உகூ)

இன்னமு மிதனை விளங்கவறியு முபாயமருளிச்செய்கிறார்.

பற்றினுட் பற்றைத் தொடைப்பதொரு பற்றறிந்து
பற்றிப் பரிந்திருந்து பார்க்கின்ற - பற்றதனைப்
பற்றுவிடி லங்கிலையே தானே பரமாகு
மற்றுமிது சொன்னேன் மதி.

இ - ள். பற்றி—மதி=ஆன்மாவுக்குக் கன்மப்லத்தை விளைவிக்கிறதேகங்களாகிய தனுகரண புவனபோகங்களினுள்ளே பற்றிக்கொண்டு நிற்கிற விச்சாஞானக்கிரியைகளை யொழிப்பதான சிவபோதத்தை விளக்கத்தக்க சிவஞானத்தை யதுகண்ணாகக்கண் டதனைக் கூடினேனென்று பிரியப்பட்டிருந்தறிகிற கருத்தையுங் கைவிடி லந்தநிலைதன்னிலே யந்த ஞானத்துக்கு மேலான சிவந்தானே பிரகாசியாநிற்கும் அறுதியாகச் சொன்னே னிதனைப் புத்திபண்ணிக்கொள்வாய், (கூ0)

இன்னமு மிந்தநிலேக்குக் குற்றம்வாராதபடி வேறுமொ ருபாய மருளிச்செய்கிறுர்.

உணராதே யாது முறங்காதே யுன்னிப்
புணராதே நீபொதுவே நிற்கி - லுணர்வரிய
காலங்கள் சொல்லாத காலத் துடனிருத்திக்
காலங்கண் மூன் றினேயுங் கண்டு.

இ-ள். உணராதேயாது முறங்காதே யுண்ணிப்புண ராதே நீ பொதுவேநிற்கில் = நீ பொருளல்லவென்றறிந்து நீங்கின தேகாதிப்பிரபஞ்சங்களிலே வாதனைமிகுதியினுலே கூடிநின்று விகற்பியாதே யிந்த விகற்பங்கள் நீங்கின வவதாங் களிலுண்டான மயக்கங்களி லழுந்தாதே சுகசொரூபத்தை யுன்போதத்தாலறிந்து கூடவிசாரியாதே யிந்தக்குற்றங்கள் நீங்கும்படி யுனக்குக் கண்ணுமா யுனக்கு நடுவேநிற்கிற ஞானத் திற்கூடி அந்த ஞானந்தாகைவேநிற்கில்,—உணர்வரிய காலங் கள்செல்லாத காலத்துடனிருத்திக் காலங்கண் மூன்றினேயுங் கண்டு = யாவராலுங் குறித்தற்கரிய செல்காலம் வருகாலம் நிகழ்காலமென்று சொல்லப்பட்ட மூன்றுகாலங்களினும்படாம லிந்தக்காலங்களாலே விசுவத்தைநடத்திக் காலசொரூபமா யிருக்கிற சிவத்துடனே நீயு மந்தக்காலங்கள் மூன்றையும் வேருகக்கண்டுகூடி யந்தச்சிவமேயா யழிவின்றியேயிருப்பை

இந்த வத்தத்திணுண்மையு மிந்தவத்தத்தை பெறத்தக்க வர்களுண்மையும் விளங்க வருளிச்செய்கிறுர்.

அறிவறிவாய் நிற்கி லறிவுபல வாமென்
றறிவி னறிவவிழ்த்துக் கொண்டவ் - வறிவினராய்
வாழ்ந்திருப்பர் நீத்தவர்கண் மானுடரின் மாணவகர
தாழ்ந்தமணி நாவேபோற் ருன்.

இ-ள். அறி—தான் = மாணவகனே? ஆன்மா தன்னுடையபோதத்தையே பொருளாகக்கொண்டு நிற்கில் விகற்பிக்கிறதே சுபாவமாய் போதமும் பலவாய்ச்சிந்தித்து விடுமென்றும் இதனை யாசாரிய னநுக்கிரகத்தாலேயறிந்து தனக்காதியே பிராணனுப்பிற்கிற ஞானத்தைக்கூட்டித் தன்னுடைய ஆன்மசுபாவத்தையுமொழிந்து அந்தஞானமேயாயந்தஞானத்தி னைக்கியத்தாலே தனக்கின்றளவுங் கிடையாத பெருவாழ்வாகிய பரமானந்தசொரூபமாகிய சிவனைப்பெற்றுத் தானு மந்தப் பரமானந்தமேயா யிராநிற்பன். இந்த வாழ்வைப் பெறவுரியாரியாரொன்னில்? மானுடப்பிறப்பி லுள்ளாரில் தேகாதிப் பிரபஞ்சங்களிலுள்ள ஆரவாரங்களைக் கைவிட்டு நிலத்திலேவைத்த மணியினது நாவேபோலச் சலிப்பற்றிருக்கிற சீமான்கள், (௩௨)

இந்த நிராதாரயோகத்திலே நிகழ்வதொரு குறியுண்டென்று மிது நிகழ்ந்தாற்செய்யு முபாயமு மருளிச்செய்கிறார்.

ஓசையெலா மற்று லொலிக்குந் திருச்சிலம்பி
னோசை வழியேசென் றொத்தொடுங்கி - லோசையினி
லந்தத்தா னத்தா னரிவையுட னம்பலத்தே
வந்தொத்தா னத்தான் மகிழ்ந்து.

இ-ள். ஓசை—மகிழ்ந்து = இந்த நிராதாரயோகத்தைச் செய்கிற சிவயோகிகள் சிவனைப் பெறுகைப்பொருட்டாகத் தேகேந்திரியாதி யந்தக்கரணங்களாயுள்ள ஆரவாரங்களொடுங்கும்படி ஞானத்தினாலே தன்னுடைய விச்சாஞானக்கிரியைகளை யொழித்தவவதரத்திலே யானந்தநிருத்தம் பண்ணியருளாநின்ற தம்பிரானார் ஸ்ரீ பாதத்தில் பாவிந்துவென்கிற திருச்சிலம்பிற் பரநாதமென்கிற வோசைதோன்றுநிற்கும், அந்த வோசை வழியே நாடிச்சென்று கூடி யந்தவோசை முடிந்தவிடத்தே தன்னுடையபோதமு மொக்கமுடியில்தானே யப்பொழுதே

ந்தவோசை முடிந்தவிடமே யிடமாகவுடைய தம்பிரானர் காருண்ணியசத்தியுடனே யம்பலமாகிய ஞானப்பிரகாசத்திலே வந்திவனைப் பிரியத்துடனே கூடுவான். (கூக)

இனித்தாமருளிச்செய்த நிராதாரயோகத்தினுண்மையைத் தம்மையொழியப் பிறரும்விளங்க வருளிச்செய்தபடி விளங்க வருளிச்செய்கிறார்.

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகி னென்றமையாற்
சார்புணர்த ருனே தியானமுமாஞ் - சார்பு
கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று.

இ - ள். சார்பு—பற்று = தெய்வப்புலமைத் திருவள்ளுவ தேவரும் " சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் ,, என்றமையால் தனக்கநாதியே தாரகமாய்நிற்கிற திருவடிஞானத்தை யதுகண்ணுகவறிந்து அதனுடனே யிரண்டறக்கூடிநிற்கில் மீண்டுமொரு சநநமுண்டாகைக்குக் கன்மமுண்டாகாதென் றருளிச்செய்த பிரமாணப்படியே தனக்குத் தரிசனமான ஞானத்தைக்கூடி யசைவறநிற்கி லதுவே சிவத்தியானமாம். அந்த நிலையில் தியானிக்கிறேமென்கிற பாவனைகுலையி லப்பொழுதே சுகசொரூபமான சிவனைக்கூடி நன்ருன சமாதி யாநாகாநிற்பன். இப்படிக்கூடின சிவயோகிகளுக்குப் பின்பு சநநத்தையுண்டாக்கிற வாகாமிய கன்மமுண்டாகாது. (கூச)

ஞானத்திலே சிவனைக் கூடவேணுமென்று சிரத்தை பண்ணுவாரை யந்தச்சிவமானது மவதிகூடாமல்வந்து கூடு முறைமை யருளிச்செய்கிறார்.

அன்றிவரு மைம்புலனு நீயு மசையாதே
நின்றபடி யேநிற்க முன்னிற்குஞ் - சென்று
கருதுவதன் முன்னங் கருத்தழியப் பாயு
மொருமகடன் கேள்வ னுனக்கு.

இ-ள். அன்றி—உனக்கு = அநாதியே யுன்னை மாறுபட்டு வருகிற விஷயங்களுள் கூடிநின்று சலியாதே யவற்றை வேருகக்கண்டு நீங்கின வுனக்குப் பிராணனுய்நிற்கிற ஞான மான தன்னுடனே யிரண்டறநிற்கு முறைமைபோல நீயு மதனைத் தரிசித்து அந்தஞானமாகவே இரண்டறநிற்கில், அப் பொழுதே யிந்தஞானத்துக்கு முதலாகிய ஞேயசொருபமாகிய சிவந்தோன்ருநிற்கும். இப்படித் தரிசனமான சிவனைக் கூட வென்று சிரத்தை பண்ணுமளவி லதற்குமுன்னே நம்முடைய கருத்தையு மழித்துத் தன்னுடனே யொரு நீர்மையாக்கிக் கொள்ளாநிற்பன், ஒப்பில்லாதசத்திக்கு நாயகனுன சிவன்.

ஆனு லான்மாவாலே சிவனைநினைத்துக் கூடலாமோ வென்னில்? சிவனை யான்மாவாலறியப்பட்ட பொருளல்ல வென் றருளிச்செய்கிருர்.

உண்டென்னி லுண்டாகு மில்லாமை யில்லையெனி
னுண்டாகு மானமையி லோரிரண்டா - முண்டில்லை
யென்னு மிவைதவிர்ந்த வின்பத்தை யெய்தும்வகை
யுன்னிலவ னுன்னுடனே யாம்.

இ-ள். உண்டெனிலுண்டாகு மில்லாமையில்லையெனி லுண்டாகும் = உண்டென்னி லுண்டாவதில்லை யென்றுமாம் இல்லையெனி லுண்டாவதில்லையென்றுமாம். எங்ஙனேயென் னில்? சிவனை யான்மபோதத்தாலறிந்து கூடலாமென்னில் ஆன்மபோதத்தாலறிந்து கூடத்தக்கப்பொருளாவது இந்திர ஞாலம்போன்ற பிரபஞ்சமாயையாலுஞ் சிவன் வாக்குமனுதீத னுகையாலு மிப்படிச்சொல்லு மவனிடத்திலுண்டாம் பொரு ளாவது சிவனைத் தெரியாததொன்றுமே. சிவனுன்மாவா லறியப்படாத பொருளென்னில்? அவனிடத்திலு முண்டானது சிவனைத் தெரியாததொன்றுமே,—ஆனமையிலோரிரண்டாம்=

ஆனபடியினாலே யிப்படிச் சிவனைத் தெரியாதிருப்ப தொரு முறைமை யிரண்டுபிரகாரமாயிருக்கும்,—உண்டில்லையென்னு மிவைதவிர்ந்த வின்பத்தையெய்தும் வகைவுன்னி லவனுன் னுடனேயாம் = இந்த பாவ அபாவமென்கிற விரண்டுவழியா லுஞ் சிவனைக் கூடிவொண்ணாதென் றறிந்து இவற்றை விட் டுத் தானாகவேநிற்கிற ஞானமாயேநின்று அளவிலாத பேரின் பத்தைப் பெறும்படி. சிவனிடத்திலே யன்பைவைக்கி லப் பொழுதேயொன்றாலும் பாவிக்கப்படாத சிவன் தன்னுடைய காருண்ணியத்தினாலே யுன்னை யிரண்டறக்கூடநிற்பன். நிரா தாரயோகமுற்றும். (௫௯)

இந்த நிராதாரயோகத்திலே மிகவும் வாதனையுண்டவர் களுக்கு ஒருபக்குவங்களிலே கூடாமைகூடினா லென்செய்வோ மென்ற மாணாக்கனை நோக்கிச் சிவஞானமாகிய தத்துவஞான மிருக்கும்படியை யருளிச்செய்கிறார்.

தூல வுடம்பாய முப்பத்தோர் தத்துவமு
மூல உடம்பா முதனான்கு - மேலைச்
சிவமாம் பரிசினையுந் தேர்ந்துணர்ந்தார் சேர்ந்த
பவமாம் பரிசறுப்பார் பார்.

இ - ள். தூலவுடம்பாய முப்பத்தோர் தத்துவமும் = ஆன்மா கன்மபலத்தைப் புசிக்கும்பொருட்டாக அன்னமயத் தால் பரிணமித்த சரீரத்திலேநின் றிதுபரிணாமமாம்படி யிந்தச் சரீரத்துக் காரணமுமாம், ஆன்மாவிற்குத் தனுகரண புவன போகங்களுமாய்நிற்கிற வான்மதத்துவ மிருபத்துநாலும் புரி கைக்குக் காலநியதிகளுமாய், இச்சாஞானக்கிரியைகளை சீவிப் பிக்கைக்குக் கலைவித்தியாராகங்களுமாய், போகங்களிலேயழு த்துகைக்குப் பிரகிருதியுமாய், மயக்குகைக்கு மாயையுமாய் நிற்கிற வித்தியாதத்துவமேழுமாகத் தூலவுடம்பிலேபொருந்தி

நிற்கிறதத்துவ முப்பத்தொன்றும்,—மூலவுடம்பா முத்னுன்கும்=இந்த மாயாதத்துவங்களைப் பிரேரிக்கவுங் கன்மங்களுக் கிடாகஞானக்கிரியைகளை நானுநிகம்பிறப்பிக்கவும் வாக்குகளையெழுப்பவுங் காரணத்துக்குத் திருமேனியாகவும் பதப்பிராரத்தற்குப் பதங்களாகவுந்தோன்றி யுள்ளே மூலவுடம்பாய்நின்று நடத்துகிற விந்துசத்திமுதலான தத்துவம் நாலும்,—மேலைச் சிவமாம் பரிசினையும்=இந்தத் தத்துவங்களுக்குக் காரணமுமா யான்மாவுக்குப் பிராணனுமாய் நிற்கிற சிவதத்துவ மொன்றின்முறைமையும்,—தேர்ந்துணர்ந்தார் சேர்ந்தபவமாம் பரிசறுப்பார் பார்=ஆகவிந்தத்தத்துவ முப்பத்தாறும் ஆன்மா புசிக்கைக்குத் துணைக்காரணமாகத் தூலசூக்குமபரமாய் நிற்கையி லிந்தமுறைமையாசாரியனருளாலே ரூபகதரிசன சுருதியுடனேபார்த்து நீங்கித்தன்னையும் ஞானத்தையுஞ் சிவனையுமுணர்ந்த சிவஞானிகளே யநாதியே பொருந்திப்போதுகிற சநநமரணங்களாகிற முறைமையைப் போக்காநிற்கிறவர்க ளாதலா லுனக்குத் திருசியமாதி விரோதமாக பிராரத்தத்தாலே பிரபஞ்சந் தோன்றினதாயினும் மிப்படிப்பார்த்துக் கூடுவாயாக. (௩௭)

இப்படிப்பார்க்க வரிதானவர்களுக்கு வேறேயுமோருபாய மருளிச்செய்கிமுர்.

எத்தனையோ தத்துவங்க ளெவ்வெவர்கோட் பாடுடைய
வத்தனையுஞ் சென்றங் களவாதே - சித்தமெனுந்
தூதுவனைப் போக்கிப்போய்த் தூக்கற்ற சோதிதனிற்
பாதிதனைக் கும்பிடலாம் பார்.

இ-ள், எத்தனையோ தத்துவங்க ளெவ்வெவர் கோட்பாடுடைய வத்தனையஞ் சென்றங்களவாதே = அநேகவிதமான தத்துவங்களையும் பலசமயிகள் கொண்டிருக்கத் தக்க கோட்பாடுகளடங்கலையுஞ் சென்றறியப்புக்கு அவற்றிலே மொத்துண்டழியாதே,—சித்தமெனுந் தூதுவனைப்போக்கிப் போய்த் தூக்கற்ற

சோதிதனிற் பாதிதனைக் கும்பிடலாம்பார்=உன்னைச் சநந மரணங்களிலே தள்ளுகைக்கு அநாதியே ஆதனுகி விசுவத்திலே வாதனைப் படுத்திப்போதுகிற சித்தவிகாரத்தை ஞானத்தாலே யொழித்துச்சென்று ஒப்பில்லாத வந்த ஞானத்தைக்கூடி யிந்த ஞானசத்தியை யொருபாதியாகவுடைய சிவனை வாக்குமனக் காடங்கள் கூடாதபடி யவன்திருவடியிலே யழுந்திநிற்கலாம்; இதனை விசாரித்துப்பார். (ருஅ)

இந்த வுண்மையிலே கூடுமளவில் உயிர்ச்சார்பு பொருட்சார்பிற் பற்றுவிடவேணுமென் றருளிச்செய்கிறார்.

சாம்பொழுது மேதுஞ் சலமில்லை செத்தாற்போ
லாம்பொழுதி லேயடைய வாசையறிற்- சோம்புதற்குச்
சொல்லுந் துணையாகுஞ் சொல்லாத தூய்நெறிக்கட்
செல்லுந் துணையாகுஞ் சென்று.

இ-ள். சாம்பொழுதுமேதுஞ் சலமில்லை செத்தாற்போலாம் பொழுதிலேயடைய வாசையறில் = இப்படிக்கொத்த சிவஞானிகளுக்குச் சரீரம்விடுவதாகிய சாக்காடு வந்தடுத்த காலத்து அந்தச் சிவரூபமாயே விடுவதொழிந்து சற்றுந் தத்துவங்களாலுள்ள வசைவுகூடாது. இதற்குக்காரணமேதென்னில்? தேகநிற்கிறபொழுதே தேகமில்லாதவர்களைப்போ லநாதியே வாதனைப்பட்டுப்போதுகிற வுயிர்ச்சார்பு பொருட்சார்புகளிற் பற்றடங்கலும் விடுகையால்.—சோம்பற்குச சொல்லுந் துணையாகுஞ் சொல்லாத தூயநெறிக்கட் செல்லுந் துணையாகுஞ் சென்று = இப்படிச் சரீரநிற்கச்செய்தே யுயிர்ச்சார்பு பொருட்சார்பில் பற்றடங்கலும் விடுமொகி லிதுதானே பணியறுத்த லென்கிற நிலைக்குச் சொல்லப்பட்ட தொருதுணையாக நிற்கும்; இதுவொழிந்துவாக்காலுரைக்கப்படாத சுத்தநெறியாகிய வீட்டின்பத்திலே பொருந்துகிற வவதாரத்துக்குந் துணையாகாநிற்கும்.

இந்தவவாவறுத்தலு மவனருளாலே வேண்டுமென் றருளிச்செய்கிறார்.

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை யென்றமையால்
வேண்டினஃ தொன்றுமே வேண்டுவது - வேண்டினது
வெண்டாமைவேண்டவரு மென்றமையால்வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன் பால்.

இ-ள். வேண்டுங்கால் வேண்டும்பிறவாமை யென்றமையால் வேண்டினஃதொன்றுமே வேண்டுவது = தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை', என்றருளிச் செய்கையாலே தேகமுள்ளளவு மிவன் விரும்பாதொழினும் பிராரத்தத்தாலே யுள்ளது கூடுமாகையால் ஒன்றைவிரும்பவேண்டுமிடத்துப் பிறவாமை யொன்றுமே விரும்ப வேண்டுவது,—வேண்டினது வேண்டாமை வேண்டவரு மென்றமையால் வேண்டிடுக வேண்டாமை வேண்டுமவன்பால் = அந்தப் பிறவாமையானது தான்வேண்டாமை வேண்டவருமென்று பிரமாணமுண்டாகையாலே நாம் விரும்பத்தக்க கர்த்தாவின் பக்கலிலே பிறவாமைக் குறப்பத்தியான அவாவறுத்த லொன்றுமே வேண்டிக்கொள்ள வேண்டுவது. இந்த வவாவறுத்த லுண்டாகவே யந்தப் பிறவாமைதானே யுண்டாம்.

இப்படி யுயிர்ச்சார்பு பொருட்சார்பிற் பற்றற்றதே சமாதிபரனுகவும் நிற்கச்செய்தே சமாதியிலேகூட விசாரித்தவர்களுக்குச் சமாதிகூடாமல் நினைவுகூடி யிதனாலே சநநங்கள் கூடுமுறைமையை யருளிச்செய்கிறார்.

அரண வுணர்வுதனி லவ்வுணர்வை மாற்றிற்
காணமுங் காலுங் கைகூடும் - புரணமது
கூடாமை யுங்கூடுங் கூடுதலுங் கூட்டினுக்கு
வாடாமை யுங்கூடும் வந்து.

இ-ள். அரணவுணர்வுதனி லவ்வுணர்வைமாற்றிற் காரண முங்காலுங்கைகூடும் = இந்திரிய வேடர்சென் றீடுகொள்ளப் படாத புகலிடமான திருவடிஞானத்திலே தன்னுடைய போத த்தை யொழிக்க விசாரிப்பானாகில் அந்தவவதரத்திலே முன்பு தான்பற்றிப் போந்த வுயிர்ச்சார்பு பொருட்சார்பின் வாதனையா லே சொரூபமானது கைகூடாமல் மனாதிகளும் பிராணவாயுவு ங்கூடி மீண்டு விடயாதிகளிலே சலிப்பினுஞ் சலிக்கும்.—புரண மது கூடாமையுங்கூடும் = இது கூடாமற் புரிந்து மயக்கம்வந் து கூடினும்கூடும்,—கூடுதலுங் கூட்டினுக்கு வாடாமையுங்கூ டும் வந்து = இப்படிமயக்க விகற்பங்கூடிப்போதவே யெடுத்த தேகம்போனாலு மிந்தப்பற்றுக்களாலே மீண்டுமொரு தேகம்வ ந்து கூடாநிற்குமாதலா லிது கூடாதபடி வுயிர்ச்சார்பு பொருட் சார்புகளில் பற்றுக்களையற்றே சுகரூபத்திலே பொருந்தி நிற்பா யாக. (௬௧)

சமாதிபரனானவனுக்கும் பற்றுக்களாலே சமாதி கூடாமல் சனனங்கள் கூடுமாகில் சிவதீக்ஷையும் தரிசனமில்லாத வான்மாக் கள் மரியாதையோ விவனுக்குப் பெற்றுள்ளதென்று கேட்டமா ணாக்கனைநோக்கி யருளிச்செய்கிறார்,

இன்றிங் கசேதனமா மிவ்வினைக ளோரிரண்டுஞ்
சென்று தொடருமவன் சென்றிடத்தே-யென்றுந்தான்
றீதுறுவ னாற் சிவபதிதான் கைவிடுமோ
மாதொருகூ றல்லனோ மற்று.

இ-ள். இன்றிங் கசேதனமா மிவ்வினைக ளோரிரண்டுஞ் சென்றுதொடரு மவன்சென்றிடத்தே = இப்பொழு திந்தத் தே கத்திலே நிற்கச்செய்தே கூடின வசேதனமான புண்ணியபாவங் களிரண்டு மிவன் பின்னொருதேகத்தை யெடுத்தபொழுதே யொக்கச்சென்று கூடாநிற்கும்,—என்றுந்தான் றீதுறுவ னாற்

சிவபதிதான் கைவிடுமோ மாதொரு கூறல்லனோ மற்று = ஒரு வன் சிவதீக்ஷையும் சிவஞானமும்பெற்றுத் தெளிந்திருக்கச்செய்தேயும் முன்புபோல வுயிர்ச்சார்பு பொருட்சார்பிற் பற்றுவிடாமற் சஙங்கூடிற்றாயினுங் கர்த்தாவாகிய சிவனு மிவனைக் கைவிடாமல் முன்புண்டானமனம் பற்றுகைக்குத் தக்கவற்றைக் கூட்டித் தொலைப்பித்து முற்சஙத்திலே சாதித்தகுறையிலே வந்தெடுத்துக்கொண்டு நிட்டையிலேகூட்டிச் சாயுச்சியத்தைக்கொடாநிற்பன். இவன் காருண்ணிய சத்தியினை யெப்பொழுதுந் தன்னிடத்திலே யுடையனுதலால்.

இன்னமு மான்மாக்களுடைய பெத்தமுத்தி யிரண்டினுமிவர்களைப் பாதுகாத்து ஈடேற்றுகை யநாதியே கர்த்தாவுக்குக் காரணமான முறைமைதோன்ற வருளிச் செய்கிறார்.

அநாதி சிவனுடைமை யாலெவையு மாங்கே
யநாதியெனப் பெற்ற வணுவை - யநாதியே
யார்த்த துயரகல வம்பிகையோ டெவ்விடத்துங்
காத்த லவன்கடனே காண்.

இ-ள். அநாதி சிவனுடைமையா லெவையுமாங்கே = அநாதியான சிவனுக்கு எண்ணிறந்த வான்மாக்களு மடிமையாகையாலே யிந்த வான்மாக்களு மிப்படியே,—அநாதியெனப் பெற்றணுவை யநாதியே யார்த்ததுயரகல = இப்படி யநாதியான வான்மாக்களை யநாதியே பேதித்துக்கொண்டு நிற்கிற பாசமானது விட்டு நீங்கும்படி,—அம்பிகையோ டெவ்விடத்துங் காத்தலவன் கடனேகாண் = விட்டு நீங்காத சத்தியுடனே பெத்தத்திலுங் கூடிநின்று தொலைப்பித்து முத்தியினுமீண்டு மோருடம்பு கூடாதபடி திருவடியிலே கூட்டிக்கொள்ளுகிற விது மானவனுக்கு மநாதியே முறைமைகாண்,

தேகாதிபாச மநாதியாகில் முத்தியிலும்போகாதே யென்று சந்தேகித்தமாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

தம்மிற் சிவலிங்கங் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன் பான் மஞ்சனநீர் தாமாட்டித் - தம்மையொரு
பூவாகப் பூவழியா மற்கொடுத்துப் பூசித்தா
லோவாமை யன்றே யுடல்.

இ - ள் தம்மிற் சிவலிங்கங்கண்டு = ஆசாரியனாலே தனு கரண்புவனபோகங்களை விட்டுநீங்கித் தன்னைத்தரிசித்துத் தன் னிடத்திலே தனக்குபிராணனுமாய்ச் சிவனுக்கடையாளமுமாய் நிற்கிற ஞானமாகிய சிவலிங்கத்தைத் தரிசித்து,—அதனைத்தாம் வணங்கி = அந்தச்சிவலிங்கத்தைத் தம்முடைய போதம் விட் டுப்போம்படிச் சாந்தமாகிய வணக்கஞ்செய்து,—தம்மன்பான் மஞ்சனநீர்தாமாட்டி = இப்படிப்பெறுதற்கரிய பேற்றைப்பெற் றோமென்கிற சிரத்தையாகிய சலத்தாலே திருமஞ்சனம் பண் ணி,—தம்மை யொருபூவாகப் பூவழியாமற்கொடுத்து = இப்ப டிச்செய்கிற வான்மசொரூபத்தை யொப்பில்லாத் திருப்பள்ளித் தாமமாக மயங்காமற்சாத்தி,—பூசித்தால் = இப்படி ஞானத்திற் சரிதை கிரியா யோகங்களினாலே உள்ளே சிவனைக்கண்டைக்கி யஞ்செய்கிறவிது,—ஓவாமையன்றேயுடல் = செம்புருகின பதத் திலேகூடின குளிகையினது ஐக்கியத்தாலே யநாதியான காளி தமும் செம்பொன்னு முருவுமுநீங்க மாற்றுப்பிரகாசித்துப் பி ன்பிவையென்றுங் கூடாதவாறுபோல வொருவன் தன்னுடைய சத்திநிபாதத்திலுண்டானவன்பின்மிகுதியாலே தேகேந்திரியாதி களை நீங்கின தன்னுடைய வுண்மையான சொருபத்தைத் தனக் கேற்பப்பெற்றுத் தன்னிடத்திலே சிவனைக் கண்டைக்கியஞ்செ ய்து வாதனைவிட்டால் பிராரத்தநாசம்பிறந்து தேகம் விட்ட பொழுதே திருவடியிலே யிரண்டற்றுவிடுமெதொழிந்து மீண்டுஞ் தேகமெடுக்கவல்லவே. (௪௪)

அஃதியானபாசம்விட்டு நீங்குமாகி லநாதியென்று ஆன்மாவுக்கு வழியுண்டாமோவென்ற மாணுக்கனை நோக்கிப் பாசத்திலேவிரிந்த போதத்தைவிட்டுத் தன்னைத் தனக்கறுதியாகப் பெறுகிறதொழிந்து இவனுக்கழிவில்லையென்றும் பாசத்தை நீங்கினபொழுதே யிவனும் வியாத்தனென்னு முறைமையுமருளிச்செய்கிறார்.

தன்னைப் பெறுவதின்மேற் பேறில்லைத் தானென்றுந்
தன்னைத்தான் பெற்றவன்று னொன்னிற்-றன்னாலே
யெல்லாந்தனுட்கொண்டு கொண்டதனைக்கொள்ளாதே
யெல்லாமாய் நிற்கு மிவன்.

இ - ள். தன்னைப்பெறுவதன்மேற் பேறில்லை = ஒருவன் பெறத்தக்க பேறுகளி ற்றுனழிந்துபோகாம லருளாலே தன்னையுறுதியாகப்பெறுகிற பேற்றின்மேல் வேறுபேறில்லை,—தானென்றுந் தன்னைத்தான்பெற்ற வன்றானொன்னில் = தானென்றுந் தன்னைத்தான் பெற்றவனென்று மிரண்டாக விவ்விடத்திற் சொன்ன தாரையென்னில்,—தன்னாலேயெல்லாந் தனுட்கொண்டு கொண்டதனைக்கொள்ளாதே யெல்லாமாய்நிற்குமிவன் = ஆன்மா தன்னையறியாமல் முன்பு பாசமேயாய்நின்ற முறைமையொழிய வருளாலே பரத்தையுமறிந்து பாசத்தையுமறிந்து இந்தப்பாசத்தையொழிந்ததுபோல இதையுமொழியவிட்டுத் தன்னுடையபோதஞ் சலியாமற் பூரணனாய்நிற்கவே யெல்லாவடிவுகளும் தன்னுடைய வடிவாய்த்தானே யிந்தவண்டாண்ட பகிரண்டத்துக் கெல்லாங் கத்தாவாய்நிற்ப னிவன்றான். (௪௫)

இந்தவான்மபோதந்தானே பொருளாயில் ஞானயோகஞ் சிவயோகமென்று சொல்லவேண்டுமோ வென்ற மாணுக்கனை

யிந்தவான்மயோகந்தானே ஞானயோகமாம்படி யருளிச்செய்து இந்த ஞானயோகந்தானே சிவயோகமாம்படி யருளிச்செய்கிறார்

துன்பமா மெல்லாம் பரவசனுய்த் தான்றுவளி
லின்பமாந் தன்வசனுய்த் தானிருக்கி - லென்பதனு
னின்வசனு யேயிருக்கி னின்னுடனு நேரிழையா
டன்வசனு யேயிருப்பன் முன்.

இ - ள். துன்பமாமெல்லாம் பரவசனுய்த் தான்றுவளில்= ஆன்மா தானே கர்த்தனு யெல்லாவற்றையு மறிகிறுனுக நின்று விகற்பிக்கி லிம்மை மறுமை யிரண்டுக்கும் பிரயோசனமாகவுள்ளது கிலேசமொழியவேறில்லே,—இன்பமாந் தன்வசனுய்த்தானிருக்கில் = ஆன்மா இிரிவுகாக்ஷியான பிரபஞ்சநீதியை விட்டுநீங்கித் தனக்கு உண்மையான சைதன்னிய சொரூபமா யிதிலே நிருவிகாரமாயிருக்கி லிந்தவான்மயோகந்தானே ஞானயோகமுமா யிந்தவழியிலே சுகரூபம் வந்து பிரகாசியாநிற்கும்,—என்பதனுல் = என்று வேதாகமங்களுக்குங் கருத்தாகையால்,—நின்வசனுயேயிருக்க நின்னுடனுநேரிழையா டன்வசனுயே யிருப்பன்முன்.= மாணவகனே? இந்திரிய வசனுகாமல் நீயு முன்னையொழிந்த பொருள்க ளெல்லாவற்றையு முனக்கு வேறென்றறிந்துவிட்டு நீங்கி நிருவிகாரமான ஞானமே சுகரூபமாயிருக்கி லப்பொழுதே யந்த ஞானசத்தியின் வசமாயிருக்கிற ஞேய சொரூபனுனசிவ னுன்னைக்கூடி வேற்ற நிற்பன். (௬௬)

இந்தச் சிவயோகத்திலே யிடைவிடாம லநுபவித்தலாவது இந்தக் கருவி கரணங்க ளொருகாலமும் கூடாதபடி யருளிலே நிற்க வல்லவர்களுக்கேயென்றுந் தோன்றவருளிச்செய்கிறுர்.

செத்தாரே கெட்டார் காணங்கள் சேர்ந்ததனே
டொத்தாரே யோகபா ரானவர்க - ளெத்தாலு
மாராத வக்காணத் தார்ப்புண்டிங் கல்லாதார்
பேராமற் செல்வரதன்பின்.

இ - ள். செத்தாரே கெட்டார் கரணங்கள்=அந்தக்கரணங்கள், நேராக வங்குரியாதபடி ஞானத்திலேகூடி மறித்த வான்மாக்களே சநநமரணங் கெட்டவர்கள்,—சேர்ந்ததஞேடொத்தாரே யோகபர ரானவர்கள் = இந்த ஞானத்தி னழுத்தத்திஞலே பிரகாசித்த சிவரூபத்திலே பொருந்தி யதுவாய் நின்றவர்களே சிவயோகத்தில் தர்ப்பரமானவர்கள்,—எத்தாலு மாராத வக்கரணத் தார்ப்புண்டிங் கல்லாதார்பேராமற் செல்வரதன்பின் = இப்படிச் சிவயோகத்தில் பொருந்தப்பெருத பாக்கியவீன ரெத்தாலுந் திருத்தியடையப்பெருத கருவி கரணங்களாலே கட்டுண்டு இவற்றின் பின்னே தப்பாமலே வரச்செய்து சநந மாணங்களிலே சென்றுழலாநிற்பர். (சஎ)

இந்தக்கருவி கரணங்க ளொருகாலமும் பொருந்தாதபடி நிற்கிறசிவயோகிகள் பெருமை யிருக்கும்படி யருளிச்செய்கிருர்.

கண் ணுங் கருத் துங் கடந்ததொரு பேறேயுங்
கண் ணுங் கருத் துங் களிகூர - நண் ணி
வடமடக்கி நிற்கும் வடவித்தே போல
வுடனடச்கி நிற்பர்கள்கா ணுற்று.

இ - ள். கண்ணுங் கருத்துங் கடந்ததொரு பேறேயுங் கண்ணுங் கருத்துங் களிகூர நண்ணி = யாவர்க்குங் கண்ணுக்குங் கருத்துக்கு மளவுபடாத தொரு பேருயினுஞ் சிவ ஞானிகள் சிவனுடனே யிரண்டறக்கூடிப் பரமானந்தமே சொரூபமாயிருக்கையாலு மவர்கள் கண்ணில் விசுவமில்லை யாகையாலு மொடுங்கினும் விழிப்பினும் பொருளேயா யவர்கள் கண்ணுக்குங் கருத்துக்குங் களிகூறப்பொருந்தி,—வடமடக்கி நிற்கும் வடவித்தே போல வுடனடக்கி நிற்பர்கள்கா ணுற்று = அநேக தூரம்படர்ந்ததோ ராலின் பரிணுமமெல்லா மொருகடுகையொத்த வித்திலே யடங்கின தன்மைபோல அளவிடப்படாத வத்துவாயினுந் தங்

களுள்ளே யடக்கித் தங்களான்ம சுபாவத்தைவிட்டு இந்தச் சிவ மாகியே நில்லாநிற்பர்கள். (சஅ)

அளவிடப்படாத பொருளை யோருடம்பிலே நிற்பானொரு வ னடக்கிக் கொண்டிருந்தபடி யெப்படி யென்ற மாணக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

வானகமு மண்ணகமு மாய்நிறைந்த வான்பொருளை
யூனகத்தே யுன்னுமதங் கென்றனையே - லேனகத்து
வாதனையை மாற்றும் வகையதுவே மண்முதலா
மாதனமே யன்றோவ தற்கு

இ - ள், வானகமு மண்ணகமு மாய்நிறைந்த வான்பொ ருளை யூனகத்தே யுன்னுமதெங் கென்றனையேல் = ஆகாசமுதல் பிருதிவி யீறாகவுள்ள பஞ்சபூத பரிணமமான பிண்டப் பிரமா ண்டங்களு மிவற்றிற்குக் காரணமான தத்துவங்களு மிதற்குட் பட்ட வான்மகோடிகளுந் தானேயாய்ப் பூரணமாய் நிற்கிற சொரூபத்தை யொருசரீரியானவன் தனக்குள்ளேயடக்க நினைத் தபடி யெப்படியென்னில்,—ஏனகத்து வாதனையை மாற்றும் வகையதுவே மண்முதலா மாதனமேயன்றோ வதற்கு = மாண வகனே ? பிருதிவி முதலாக முன் சொல்லப்பட்டவை யெல்லா மந்தப் பொருளுக் காதனமாத்திர மல்லவோ வாகையாலுமப் பொருளை யாசாரியனாலே கூடப்பெற்றவர்களிடத்தி லந்தப்பொ ருளின் வியாத்தமெல்லாநின்று பிரகாசிக்கைகயாலும் ஞானதிரு ஷ்டி யில்லாதவர்களுக்குச் சரீரிகள்போலத்தோற்றினுமவனந்த வண்மையேயாய் நிற்பானுகையாலு மென்போல்வாரிடத்து மநாதியே கூடிப் போந்த வாதனையைப் போக்குகைக்கு இந்தநிலை யேகாண் முறைமையாகவுள்ளது. (சகூ)

இந்தப்பொருளை யுள்ளேகண்டு வாதனை தீர்ந்திருப்பார் போல் புறம்புங்கண்டு வாதனை போக்கலாமோ வென்ற மாணக் கனை நோக்கியருளிச்செய்கிறார்.

கல்லிற் கமரிற் கதிர்வாளிற் சாணையினில்
வல்லுப் பலகையினில் வாதனையைச் - சொல்லு
மகமார்க்கத் தாலவர்கள் மாற்றினர்கா ணையா
சகமார்க்கத் தாலன்றே தான்.

இ - ள். கல்லில்—தான்=கல்லினுங் கமரினு மொளியை யுடைய வாளினுஞ் சாணைக்கல்லினு நெத்தைப்பலகையிலும் திருக்குறிப்புத்தொண்டர் முதலாகவுள்ள நாயன்மா ரொவ்வொ ருதொழில்களைச் செய்யச்செய்தேயு மவற்றைச் சொல்லப்பார்க் கிலவர்களுஞ் சிவனளவி லொருவழிபட்ட கருத்தினாலே யல் லோ வவர்களுக்குப் புறம்பேயும் பிரகாசித்துப் பிறப்புக்கு வித் தான வாதனையைப்போக்கினார்கள், ஐயனே ? இந்த முறைமை பொய்யான வுலகநெறியல்லவே. (ருய)

இந்த விரண்டுவகையாலு மெதிலேநின்று வாதனை போக் கலாமென்ற மாணுக்கனை நோக்கி இதனை யிரண்டுவகையாக நீ கருதவேண்டாமென்று மொருபடித்தாகக் காணவேணுமெ ன்று மருளிச்செய்கிறார்.

உள்ளும் புறம்பு நினைப்பொழியி லுன்னிடையே
வள்ள லெழுந்தருளு மாதினொடு - தெள்ளி
யறிந்தொழிவா யன்றியே யன்புடையை யாயிற்
செறிந்தொழிவா யேதேனுஞ் செய்.

இ - ள். உள்ளும் புறம்பு நினைப்பொழியி லுன்னிடையே வள்ளலெழுந்தருளு மாதினோடும் = உள்ளேகாண வென்றும் புறம்பே காணவென்று நீ விசாரித்த விடத்து உன்னுடையபோ தத்தையுஞ் சரீரத்தையு முன்புபோலே கைவிடாததுகொண்டு இரண்டுபட்டுத் தோன்றினதொழிந்து அந்தப்பொருளுக்குத் தனித்தனி ஒரிடமா யிராதாகையால் பிண்டப் பிரமாண்டங் களையுந் தத்துவங்களையு மான்மபோதத்தையும் ரூபதரிசனசுத்தி

யாலே யருளாக்கி யொருநீர்மையான ஞானமேயா யுன்னினை யொழியநிற்கி லப்பொழுதே யுன்னிடத்திலே பரமசிவனானவர் தன்னுடைய காருண்ணிய சத்தி யுடனே கைம்மாறு கருதாமல் வந்து தோன்றி யுன்னை ஒருதன்மையாக்கிக்கொண்டு தானேபிர காசியாநிற்பன்—தெள்ளியறிந் தொழிவாய்=இதனைச் சிவயோ கத்தின் கண்ணே நின்றாய்த் தநுபவிக்கின்றே மென்கிற தன் மையுங் கைவிட்டு நின்றுயாதல்,—அன்றியே யன்புடையையா யிற் செறிந்தொழிவாய் = இந்த முறைமையல்லவாகிற சிவனு டைய வுண்மையைக் கேட்குதல் நினைக்குதல் காண்குதல் செய் தபொழுதே யுன்னுடைய கருத்தை யுருக்குவதான தொரு பேர ன்பு கூடுமாயி னதனாலே யுன்னுடைய கருத்தானது நேராக வழிந்து சிவனுடனேயொரு நீர்மையாய் விட்டாயாதலால்,— ஏதேனுஞ்செய்=இந்த ஞானயோகத்திலும் பத்தியோகத்திலு மி வையிரண்டினுங் கூடின தொன்றைச் செய்வாயாக. (கூ௫)

இனியிந்தப் பத்தியோகந்தா னெப்படியென்ற மாணாக் கனை நோக்கிப் பத்தியிலேநின்று பெற்றவர்கள் பெருமை இப் படியென் றருளிச்செய்கிறார்.

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை யென்றமையாற்
கண்ணப்ப னொப்பதோ ரன்பதனைக் - கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறித லல்லதும்ற்
றாரறியி மன்பன் றது.

அவிழ்ந்த துணியி லவிழ்ந்த வவிழை
யவிழ்ந்த மனத்தா லவிழ்க்க - வவிழ்ந்தாடை
வேந்தனூர்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பிற்
சேந்தனார் செய்த செயல்.

சுரந்த திருமுலைக்கே துய்யசிவ ஞானஞ்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்-சுரந்த
தனமுடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையா ளன்பிருந்த வாறு.

அன்பேயென் னன்பேயென் றன்பா லழுதரற்றி
யன்பேயன் பாக வறிவழியு - மன்பன்றித்
தீர்த்தந்தி யானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான்.

இ - ள். இப்படிப்பட்ட பத்தியோகத்திலே விட்டகுறைகளாலே சிவனுடைய வுண்மையை நினைத்தல் கேட்டல் காண்குதல் செய்தபொழுதே கரையழிந்த வன்பினாலே யொருபலத்தையுங் கருதாம லந்த வன்புதானே தங்களுக்குச் சுசரூபமாகநின்று தங்களை மறந்து பேறுபெற்ற கண்ணப்பநாயனார் முதலாயுள்ள நாயன்மா ரன்பையொழிந்து தீர்த்தங்களுந் தியானங்களு மர்ச்சனைகளு மிப்படி யவதிகொடாமல் பேறுகூட்டமாட்டா தாகையா லவையுமிந்த வுத்தமமானபத்தி கூட்டுதற்குவித்தாம் இதனைச்செய், (௫௨)

இனியாவர்க்கும் பத்திகூடுதற் கரிதென்று முறைமையிலே கூடத்தக்க ஞானயோகமே வாதனையைத் தீர்த்து முத்தியைத் தருவதென்று முன்னே பலபிரகாரங்களாகச் சொல்லப்பட்ட வுபாயங்களுந் தாற்பரிய மிதுவேயென்று மற்றுள்ள சமயிகள் தாற்பரியங்க ளிந்த வுண்மையைக் கூடமாட்டாதென்று மெல்லாவற்றையுந் தொடுத்து வாதனை தீர்ந்திருக்கைக்கு ஞானயோகமே பொருளென்று துணிய வருளிச்செய்கிறார்.

எல்லா ரறிவுகளின் றாற்பரிய மென்னறிவு
செல்லு மிடத்தளவுஞ் சென்றறிந்தேன் - வல்லபடி
வாதனையை மாற்றும் வகையிதுவே மற்றவற்று
ளேதமறக் கண்ட விதம்.

இ - ள். எல்லார் - விதம்=மாணவகனே? இந்த நூலிற் சொல்லப்பட்ட வுபாயமொழிந்து வேறு மறியவேண்டுவ துண் டோவென்று நீ சந்தேகிக்க வேண்டுவதில்லை, எல்லாச்சமயங்க ளினு மெல்லாச் சாத்திரங்களினு முண்டான தாற்பரியார்த்தங்க ளென்னு லாராயத்தக்கவளவு மாராய்ந்தறிந்தேன், அவையெல் லாவற்றினும் வாதனையைப் போக்கி முத்தியைக் கூட்டுகைக்கு முறைமையாகக் கண்டது சைவசித்தாந்தத்தில் சொல்லப்பட்ட விந்தஞானயோக மொன்றுமேயாதலா லிந்தவநுபூதியெல்லாக் குற்றங்களுந் தருகைக்குக் கண்ட வர்த்தமாதலின் நீயுமிந்த மு றைமையிலே சாதிப்பாயாக, (ருசு)

இனியிந்த வத்தத்தைப் பெறுதற்கரிய முறைமையும் பெற் ருல் நிற்கவரிதான முறைமையு மருளிச்செய்கிருர்.

வித்துமத னங்குரமும் போன்றிருக்கு மெஞ்ஞானம்
வித்துமத னக்குரமு மெய்யுணரில் - வித்ததனிற்
காணுமை யாலதனைக் கைவிடுவர் கண்டவர்கள்
பேணுமை யாலற்ருர் பேறு.

இ - ள். வித்துமத னங்குரமும் போன்றிருக்கு மெய்ஞ்ஞா னம் = நெல்லுமுதலான பலவித்துக்களு மங்குரிக்கும்பொழுது அங்குரத்துட னிரண்டுபட னில்லாமலந்த வங்குரமுள்ளளவும் வியாத்தமாய் நின்று பரிணமித்து இந்தப் பரிணமத்தைப் பிர யோசனங் காரணமாக வங்குரித்த நாண்முத லாசரித்துக்கொ ண்டிருந்த ஆன்மாக்களுக்குப் பரிணம முதிர்ந்த அந்தக் காலங் களிலே வித்தானது வெகுவிதமாகப் பலித்தவர்கள் தாகங்களை க்ஷமிப்பித்துச் சந்துஷ்டிப் பிறப்பிக்க வின்பத்தையே கொடா நிற்கும் அதுபோல வித்தான சிவமும்ஆன்மாக்களுக்குக் கன்ம வொப்பு மலபாகமு முண்டான வஸதரத்திலே காருண்ணியமே திருமேனியாக வெழுந்தருளிவந்துபக்குவப்பட்ட வான்மாக்களை

த்தம்முடைய ஒளியிலே நினைக்கும்படியுந் திருவுள்ளத் தடை த்து இவர்களிடத்திலேயாகியே யெழுந்தருளிநின்ற வுண்மை யையும் பிரகாசிப்பித்து இந்த வுண்மையான ஞான சுரூபத் திலே யான்மாக்களையுங் கூட்டிநிறுத்தி யிந்த நிலையின் முதிர்ச்சி யாலே தன்னுடைய சுரூபமான பேரின்பத்திலே யிவர்களது பவித்துச் சம்பூரணத்தை யடையும்படி வெகுபலமாகக் கொடா நிற்கும்,—வித்துமத னங்குரமு மெய்புணரில்=இந்த வித்தாகிய சிவனுண்மையு மங்குரமாகிய ஞானத்தினுண்மையு முணர்வா ருணருமிடத்து,—வித்ததற் காணாமையா லதனைக் கைவிடுவர்= நெல்லு முதலான வங்குரங்களை யிந்தவித்தின் பரிணாமமென்று மிந்தப் பரிணாமங்களிலே யந்தவித்துக் கலந்துநிற்குமென்று மங் குரத்தின் பரிணாம முதிர்ந்தபொழுதே யந்தவித்தே வெகுபல மாகப் பலிக்குமென்று மிதனை யாசரித்துக்கொண்டிருந்துபலிப் பிக்குங் காலங்களிலே பலங்கொள்ளவறியாம லங்குரம் பரிண மிக்கிற காலத்திலே வித்துதோன்றுததுகொண்டு இந்தப் பரிணா மத்தி லோர்வித்துங் கண்டிலோமென் றந்தப் பரிணாமத்தையுங் கைவிட்டு அதினுடைய பிரயோசனமு மிழந்துபோகிற புத்தரை ப்போலத் தரிசித்து ஞானத்திலேநின்று சாதித்து இந்த ஞான மேயாய் இந்த ஞானத்துக்கு முதலாகிய சிவனைக்கூடிப் பே ரின்பத்தையே பெறமாட்டாம லந்தஞானத்தைத் தரிசித்தவள விலே யிவ்வளவே பிரயோசனமென்று சிவரூபத்தி னுண்மை யை யறியாம லந்தஞானத்தையுங் கைவிட்டுப்போன பாக்கிய வீனர் சிவயோகத்தை யிழந்துபோகாநிற்பர்கள்,—கண்டவர் கள் பேணாமையாலற்றார்பேறு=அந்த நெல்லுமுதலான வங்கு ரங்களிலே வித்துகலந்து நிற்குமென் றறிந்தவர்களும் பயன்படு மளவு மந்தப் பரிணாமத்தை யாசரித்துக்கொண்டிருந்து பிரயோ சனப்படுங்காலங்களிலே பிரயோசனங் கொள்ளமாட்டாமல் பரா முகத்தாலே யதின் பிரயோசனத்தை பிறர்கொள்ள தாமிழந்து போகிற பாக்கிய வீனரைப்போலச் சிவனைத்தாரமாகவொழிந்து

ஞானம்பிரகாசியாதென் றறிந்தவர்களுமந்தஞானத்தைக் கைவி டாமனின்று விசுவத்தைக் கைவிட்டு மந்தஞானமாகவே சாதி த்துஇந்த ஞானத்தி னைக்கியத்தாலே சிவனைப்பெற்றுப் பேரின் பமே யநுபவித்துத் திருப்தியடையமாட்டாமல் வாதனையின் மிகுதியாலே பராமுகமாய்த் தாம்பெற்ற ஞானத்தினைப் பின்பு நுபவிக்கலாமே யென்றும் நித்ததத்துவம்பெற்று மிருப்பாரைப் போல நெகிழ்ந்திருந்தவர்கள் தமக்குப்பேறான சிவயோகத்தை யிழந்துபோகாநிற்பர்கள் ஆதலால்நீயுமிந்தத்தவத்தைப்பெற்றோ மென்று கர்வியாப்போகாதே யிடைவிடாமல் ஞானமாய்நின் றே சாதித்துப் பின்பிந்த ஞானத்தி லுறுதலாலே ஞானமாண துந் தலைமறையப் பலிக்கத்தக்க சிவபோகத்திலேயழுந்தி யநு பவிப்பாயாக. இதற்குப்பிரமாணம் திருமந்திரம்—“ வித்தினில ன்றி முளையில்லையம்முளை, வித்தினிலன்றி வெளிப்படுமாறில் லை, வித்துமுளையு முடனல்லவேறல்ல, வத்தன்மைத்தாகு மற நெறிதானே” (௫௭)

இந்தச் சிவரூபந்தன்னை யெப்படி யறிவேனென்ற மா ணாக்கனைநோக்கி யருளிச்செய்கிறார்.

ஒன்றன் றிரண்டன் றுளதன் றிலதன்று
நன்றன்று தீதன்று நானன்று - நின்ற
நிலையன்று நீயன்று நின்னறிவு மன்று
தலையன் றடியன்று தான்.

இ - ள். ஒன்றன்று = எல்லாப் பொருள்களுங் கரைந்த விடத்திலே யுதிப்பதொன்றாகையாலே யெல்லாப்பொருளுந் தானு யொன்றாயிருப்பதுமன்று,—இரண்டன்று = தன்னிடத் திலே சுட்டறவிளைகிற வத்தமாகையினாலே யிரண்டாயிருப்ப துமன்று,—உளதன்று = வாக்குமனாதீதமா யிருப்தொன்றாகை

யாலே பிரத்தியக்ஷமா யிருப்பதுமன்று,—இலதன்று = ஞானவான்களுக்கு ஞானயோகத்தின் முதிர்ச்சியிலே பரமானந்தத்தையளித்து நிற்கையாலே யில்லாத பொருளுமன்று,—நன்றன்றுதீதன்று=ஆன்மபோத மிறந்தால் கூடும்பொரு ளாகையாலே ஆன்மாக்களால் நன்று தீதன்று சுட்டப்படுவதுமன்று,—நானன்று=நானே பிரமமென் றலங்கரிக்கிற பசுஞானமன்று,—நின்றநிலையன்று=அநாதியேதொடங்கி யின்றளவும் நிலையான பாசஞானமன்று.—நீயன்று = பசுஞானத்தையும் பாசஞானத்தையுமுடைய ஆன்மாவுமன்று,—நின்னறிவுமன்று=உனக் கறிவாய்நிற்கிற ஞானமுமன்று,—தலையன் றடியன்றுதான் = ஆதியந்தமில்லை யந்தச் சிவசொரூபத்துக்கு. (௫௮)

இப்படி நிச்சயார்த்தமா யிருப்பதொன்று கூடும்படி யெப்படியென்ற மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

செய்யாச் செயலையவன் செய்யாமை கண்டுதனைச்
செய்யாச் செயலிற் செலுத்தினா - லெய்யாதே
மாணவகவப்பொழுதே வாஞ்சைக் கொடிவளர்க்கு
மாணவமு மித்தா லறி.

இ - ள்· செய்யாச்செயலையவன் செய்யாமைகண்டு தனைச் செய்யாச்செயலிற் செலுத்தினால்=ஆன்மாவினிடத்திற் பக்குவத்திலேவிளைந்த பரமானந்தத்தை யான்மாவறிந் துண்டாக்கிக் கொண்டதுமல்ல சிவன் விகாரியாய்நின்று கொடுத்ததுமல்ல ஞானமானது கரைந்தவிடத்திலே பிரகாசிக்கிற படியையறிந்து இந்தப் பரமானந்தம் பிரகாசிக்கிறபொழுதே விதுவுந் தோன்றாம லதுவே சுகரூபமாய் நிற்கும்படி யந்த நினைவானதவிழத் தானுமந்த நிராலம்பமேயானால்,—எய்யாதே மாணவகவப்பொழுதே வாஞ்சைக் கொடிவளர்க்கு மாணவமு மித்தா லறி=மாணவகனே ? சநநத்துக்குக் காரணமாகவுங் குறிக்கப்ப

டாநின்ற வாசைய்ாகிற கொடிகளை வளர்க்கப்பட்டாநின்ற மூல மல்மாகிய ஆணவமல மப்பொழுதே வேறற்று விடாநிற்கும் நீ யொன்றுக்கு மஞ்சாதே இப்படி யறிவாயாக. (௬௯)

இந்தப்பொருளை சாதிப்பா னொருவனுக்கொரு செயலுங் கூடவொண்ணுதபடியாலே யவனுக்கொரு நியமம் வேண்டா மென் றருளிச்செய்கிருர்.

ஏதேனுங் காலமுமா மேதேனுந் தேசமுமா
மேதேனுந் திக்கா சனமுமா - மேதேனுஞ்
செய்வா னொருவனுமாஞ் செய்யாச் செயலதனைச்
செய்யாமை செய்யும் பொழுது.

இ - ள். ஏதேனு - பொழுது=ஆன்மபோதமுள்ளளவு மிதற்கறிதாகிய வந்தநிராலம்பமான வுண்மை ஒருவன்தன்செயலன்றியே கூடுமிடத்து மின்னகாலமென்னும மெல்லாக்காலமுமா யெல்லாத் தேசமுமா யெல்லாத் திக்குகளுமா யெல்லா வாதனங்களுமா யெல்லாத் தொழில்களினு நிற்பா னொருவனுமாம்.

இனியிந்தச் சிவயோகத்தை யெளிதாகச் செய்வதாயிருக்கச்செய்தே செய்யாதிருக்கிறபடியு மிந்தச் சிவயோகத்தின் பெருமையு மருளிச்செய்கிருர்,

செய்தற் கரிய செயல்பலவுஞ் செய்துசில
மெய்தற் கரியதனை யெய்தினர்க - ளையோநாஞ்
செய்யாமை செய்து செயலறுக்க லாயிருக்கச்
செய்யாமை செய்யாத வாறு.

இ - ள். செய்தற்கரிய செயல்பலவுஞ் செய்துசில மெய்தற்கரியதனை யெய்தினர்கள்=சிலர் கர்த்தாவைநோக்கித் தங்கள் சரீரத்தையு மனத்தையும் வருத்தி யாவராலுஞ் செய்தற்கரிய

செயல்கள் பலவற்றையுஞ்செய்து பெறுதற்கரிய பேற்றினைப் பெற்றார்கள்,—ஐயோனுஞ் செய்யாமைசெய்து செயலறுக்க லாயிருக்கச் செய்யாமைசெய்யாதவாறு = என்னே மாணவக னே ? எல்லாவிகற்பங்களு மொழிந்து நிர்விகாரணமான சுபா வத்தைப்பொருந்திச் சுகத்துக்கங்களிலே மொத்துண்பதான சந நமரணங்களை வேரறுத்துவிடலாயிருக்க விந்த நிர்விகாரமான வுண்மையை நான் செய்யாதிருப்பதேதான். இப்படிப் பொது ப்படச் சொன்ன விந்த வுண்மையை யிவன் நெகிழாமல் விரை ந்துகூடுகைப் பொருட்டாக வுபாயமாகவே யருளிச்செய்ததெ னக்கொள்க. (சுக)

இந்த வுண்மைக ளொன்றுமறியாத விசுவத்தார் படுகிற கிலேசத்தைக் கண்டு மேல்நொந் தருளிச்செய்கிறார்.

இப்பொருள்க ளியாதேனு மேதெனினு மொன்று
செய்த, லெப்பொருளுஞ் செய்யா தொழிந்திருத்தல்
மெய்ப்பொருளைக், கண்டிருத்தல் செய்யாதே கண்ட
மனிதரெலா, முண்டிருப்ப தென்றோ வுரை.

இ - ள். இப்பொருள்—உரை.=மாணவகனே ? எண்ணிற ந்த வான்மாக்களிற் பெருதற்கரிய மக்கள்யாக்கையைப் பெற்ற வான்மாக்கள் சிவனைநோக்கி மெல்வினையென்று சொல்லப்ப ட்ட சரிதையாதல் கிரியையாதல் வல்வினையாத லாதாரயோக ங்களாதல் இவற்றிலே யாதொன்றைச்செய்கை விவையொன்றை யுஞ்செய்யாத நிராதாரயோகத்தைச் செய்திருத்தல் இந்தவுண் மையான பொருள் நிற்கிறமுறைமை யறிந்து தானுமந்த வுண் மையிலே முறைமைபாகப் பார்த்துக் கூடியிருந்த விந்தமுறை மைகளிலே யொன்றைச்செய்து பெறுதற்கரிய பேறுகளைப் பெறாதே தாந்தாம் விரும்பப்பட்ட தேகங்களு மத்தங்களும் நிலையில்லாதபடி கண்டுபோதுகிற வான்மாக்க ளெல்லாருந்

தேகங்களைப் போற்றிநின்று இதாவிதங்களைப் புசித்து அஞ்ஞான மெஞ்ஞானமாய்ப் போதுகிறவிது என்னகாரணத்தால் இதனை நீ சொல்வாயாக. ஞானத்துக்குப் பக்குவரல்லாத வான்மாக்களை நோக்கி நொந்தருளிச் செய்தாராக வருளிச்செய்தவிதுவும் சர்வான்மாக்களுக்குங் கிட்டாதபொருளுன்னுடைய பாக்கியத்தினாலே கிட்டின விதனைக் கைவிட்டு வாதனையைக் கைவிடாமல் நின்று இந்திரிய வேடர்க் கடிமையாய்ப் பேறிழந்து போகாதே இந்தவுண்மையிலே யிடைவிடாமல் நின்று சாதிக்கைப்பொருட்டாக வந்நிய வுபதேசமாக வருளிச்செய்ததெனக்கொள்க. (௩௨)

இனிச் சீடனைப்பார்த் தொன்றருளிச்செய்கிறார்.

வீட்டிலே சென்று வினையொழிந்து நின்றிடிலென்
நாட்டிலே நல்வினைகள் செய்திடிலென்-கூட்டில்வாட்
சாத்தியே நின்றிலையேற் றக்கனார் வேள்விசெய்த
மாத்திர மேயாங்கண்டாய் வந்து.

இ - ள். வீட்டிலே சென்று வினையொழிந்து நின்றிடிலென்=முன்பு மருவிப்போந்த தொழில்களையும் புத்திரமித்திர களத்திராதிகளையுங் கைவிட்டுத் துறவறத்திலேபோய் நின்றாலும் பிரயோசனமென்;— நாட்டிலே நல்வினைகள் செய்திடிலென் = இல்லறத்திலேயிருந்து நன்றானவெக்கியாதி கன்மங்களைச் செய்தாலும் பிரயோசனமென்.—கூட்டில்வாட் சாத்தியே நின்றிலையேல் = பொருந்தினதொரு நிலையிலே நின்றாயாயினுனக்குப்பிராணனான சிவனைக்கூடி யவன்செயலாகவே கருதி யுன்னுடைய செயலற நின்றாயில்லையாகில்;— தக்கனார்வேள்வி செய்தமாத்திரமேயாங் கண்டாய்வந்து = தக்ஷப்பிரஜாபதி தன்னுடைய வகங்காரத்தின் மிகுதியாலே கர்த்தாவை யிகழ்ந்து தன்னாலே செய்யப்பட்டதாகவே நின்று எக்கியத்தைச் செய்தொ

ருபிரயோசனமுங் கைகூடாமல் நீங்காத துன்பமே பெற்றாற் போல நீயுங் கர்த்தாவைக் கைவிட்டுன்னுடைய செயலென்றே நின்றுபெருதற்கரிய பேற்றையிழந்து போவையாகையா லிப்ப படிச்செய்யாம லந்தவுண்மையிலே நிற்பாயாக. இது திட்டாந்த பூர்வமாக வறிவித்தது. (௫௩)

இன்னமுமிவன் செயலறநின்று சாதிக்குமுபாயத்தை யுறு திப்பிறக்கும் வண்ணமருளிச்செய்கிறார்.

சிவன்முதலே யன்றி முதலில்லை யென்றுஞ்
சிவனுடைய தென்னறிவு தென்றுஞ் - சிவனவனு
தென்செயல தாகின்ற தென்று மினைவயிற்றைத்
தன்செயலாக் கொள்ளாமை தான்.

இ - ள். சிவன்முதலேயன்றி முதலில்லையென்றும் = நித்த னாய்ச் சுத்தனா யெப்பொருட்குந் தாரகமாய்க் கிருத்தியகாரண னுமாய்க் கைவல்லிய தியாகியுமா யசைவின்றியேநிற்கிற சிவனாகி றகர்த்தாவை யொழிய வேறு நானென வொருமுதலில்லையென் றும்,— சிவனுடையதென் னறிவதென்றும் = ஆன்மாக்கள் யா னே யறிந்தேனென்கிற வறிவெல்லா மவனாலொழிந்தறியப்படா தாகையால் நீயு மிதனை யவனறிவேயென்றும்,— சிவனவன தெ ன்செயலதாகின்றதென்றும் = எக்காலமு மான்மாக்கள் யான் செய்தேனென்று செய்யத்தக்க செயல்களெல்லா மந்தக் கத்தாவி ன் செயலாகையால் நீயுமிதனை யந்தக் கத்தாவின் செயலேயெ ன்றும்'— இவையிற்றைத் தன்செயலாக் கொள்ளாமைதான் = இப்படி நினைப்பன சொல்வன செய்வனவான விவற்றை யெப் பொழுதுந் தன்னுடைய செயலாகக் கொள்ளாமல் சகலமுங் க ர்த்தாவின் செயலேயென்று யாவர் சிலர் தானறநின்றார்கள் அவர்க ளந்தப்பொருள் தானாய் விடுவர்கள். (௫௪)

இனியிந்த வத்தம்சைவ சித்தாந்தத்தி லொழிந்து வேறொருசமயங்களினு மில்லையென்றருளிச்செய்கிறார்.

இன்றிச் சமயத்தி னல்லதுமற் றேழையுட
னென்றுசொலி மன்றத்து நின்றவரா - ரின்றிங்கே
யங்கமுயிர் பெறவே பாடு மடியவரா
ரெங்குமிலைக் கண்டா யிது.

இ-ள். இன்றிச்சமயத்தி னல்லதுமற் றேழையுடனென்று சொலி மன்றத்து நின்றவரார்=இப்பொழுதிந்தச் சைவசித்தாந்தத்திலொழிந்து இப்படிக்கொத்த பரமஞானத்தையு மருளிச்செய்து ஞானசத்தியுடனே கத்தா திருவம்பலத்திலே யெழுந்தருளிநின்று ஆனந்த நிருத்தஞ்செய்தருளித் தன்னுடைய மெய்யடியார்க்கு எடுத்தருளிய ஸ்ரீபாதமே யிரக்ஷையென்று காட்டிய கையுடனே மோனத்தாலேமொழிந்து திருக்கண்சாத்தியருளி யெல்லாருங் காணவேநின்றார் வேறொறு சமயங்களிலுண்டோ, —இன்றிங்கே யங்கமுயிர்பெறவே பாடுமடியவரார் = இன்றிந்த லோகத்திலே ஞானமுதமாகிய திருமுலைப்பாலை யமுதுசெய்து இந்தப்பெருமையாலே நெடுநாளாக வஸ்தியாகக்கிடந்து முன்பு போலே பிராணன்பெற்றுப் பிள்ளையுமாயுள்ள வயதுஞ்சென்று எழுந்திருக்கும்படி திருவாய்மலர்ந்தருளி இதனைப் பரசமயிகள் தங்களஞ்ஞானத்தாலே சித்துக்காட்டின ரென்னமல். (சித்தர் சித்துகாட்டுமது மீண்டு மப்பொழுதே பொய்யாய் விடுமாகையால் இப்படியன்றியே) யிந்தப்பெண்பிள்ளை நெடுங்காலமிருந்து முன்னே பிதாவானவன் நாயனுருக்கு வாழ்க்கைப்படுத்தவென்றபடியாலும் அவரிதற்குப் பொருந்தாதபடியாலும் இவர்களும் வேறொன்றுக்கும் பொருந்தாமல் தவத்திலேநின்று பின்பெல்லாருங்காணவே திருப்பெருமணத்திலே கூடப்புகுந்திட இப்படிநிறுத்தின விந்தச்சமயத்தில் சம்பந்தப்பெருமா னுயனுரொழி

ந்து வேறுமொரு சமயங்களிலுண்டோ,— எங்குமிலக் கண்டா யிது = இந்தமுறைமைகளிந்தச் சமயத்திலொழிந்து மாணவக னே? வேறொரு சமயங்களினு மில்லைகாண்,

இனியிந்தச் சைவசித்தாந்தத்தி லுறுதிப்பாட்டிலே நின்ற சிவஞானிகள் பெருமையை யருளிச்செய்கிறார்.

விரிந்துங் குவிந்தும் விழுங்குவர்கண் மீண்டுந்
தெரிந்துந் தெரியாது நிற்பர் - தெரிந்துந்
தெரியாது நிற்கின்ற சேயிழைபா லென்றும்
பிரியாது நின்றவனைப் பெற்று.

இ-ள், விரிந்துங் குவிந்தும் விழுங்குவர்கள் = இந்தச் சிவ ரூபந் தன்னிடத்தி னிற்கிறப்போல வெவ்விடத்து நிற்கிற மு றைமையைக்கண்டு பேரின்பத்தை யெய்தியு மிதிலுறுதலாலே தன்னையும் பிரபஞ்சத்தையு மந்தப்பொருள் தன்னையுமறந்து சுபாவத்திலேபழுந்தி யநுபவித்துஞ்செய்யாநிற்பர்கள்,—மீண்டுந் தெரிந்துந் தெரியாதுநிற்பர் = இந்த முறைமைகளிலே யநுபவி யாநிற்கச்செய்தேயும் பிராரத்தத்தாலே பிரபஞ்சந் தோன்றின லுஞ் சொருபத்தி லேக்கியத்தாலே பிரபஞ்சநீதியறியாமலந்த வுண் மையைக்கண்டு நில்லாநிற்பர்கள்,—தெரிந்துந் தெரியாது நிற்கி ன்ற சேயிழைபாலென்றும் பிரியாதுநின்றவனைப்பெற்று= அநா தியே சர்வத்தையுமறிந்து மறிவித்து நடத்தாநிற்கச் செய்தேயுந் தானொரு விகாரங்களினும் படாமல் நிற்கிற ஞானசத்தியுடனே யெக்காலமும்விட்டு நீங்காத சிவனைத் தங்களிடத்திலறுதியா கப்பெற்ற சிவஞானிகள். இதுசிவஞானிகளுக் கொடுக்கத்திலும் விரிவிலுந் திருவிலு மிந்தவுண்மையே யொழியப் பிரபஞ்சவாத னை கூடாதென்றறிவித்தது. (ரு ரு)

இன்னுமொரு திருவெண்பாவாலே யிதனை விளங்கவரு ளிச்செய்கிறார்.

ஆதனமு மாதனியு மாய்நிறைந்து நின்றவனைச்
சேதனைக் கொண்டே தெளிவுற்றுச்-சேதனனைச்
சேதனனி லேசெலுத்திச் சிற்பரத்த ராயிருப்ப
ரேதமறக் கண்டவர்க ளின்று.

இ-ள். ஆதன—இன்று = ஆன்மாக்களுக் கிருப்பிடமான தத்துவங்களையு மிவையிடமாக நிற்கிற ஆன்மாக்களையு மநாதியே பொருந்தியவையவரா யல்லவுமாய்நிற்கிற சைதன்னிய சொரூபனான சிவனை யவன் காருண்ணியத்தினாலே ஞானமேதிருமேனியாகக் கொண்டெழுந்தருளி வந்த வாசாரியனைக்கொண்டே தெளிந்து தானுமந்தச் சைதன்னிய சொரூபனாய் நிற்கிற தன்னையு மந்தச் சைதன்னியமானது கரையும்படியந்தச் சிவன் கையிலேகொடுத்து ஞானத்துக்கு மேலாகிய வந்தச்சிவமாகியேயிராநிற்பர்கள் திரோதாயிநீங்கத் தரிசித்த கலியாணர்கள். ()

இப்படி நிற்கத்தக்க சிவஞானிகளிடத்திலுண்டான விசேஷங்க ளருளிச்செய்கிறார்,

தாமடங்க விந்தத் தலமடங்குந் தாபதர்க
டாமுணரி லிந்தத் தலமுணருந் - தாமுனியிற்
பூமடந்தை தங்காள் புகழ்மடந்தை போயகலு
நாமடந்தை நில்லா ளயர்ந்து.

இ-ள். தாமடங்க விந்தத்தலமடங்குந் தாபதர்கடாமுணரி லிந்தத் தலமுணரும் = இப்படி ஞானத்திலேநின்று சாதித்தவர்க ளந்தச் சிவனைப்பெற்று சிவனிடத்திலே யொடுங்கவே ஞானமு மொக்கவொடுங்காநிற்கும்,—இப்படிக்கொத்த சிவஞானிகள் பிராரத்தத்தாலே நிலைதிரிந்தாலு முன்பொடுங்கின ஞானமு மொக்கவுணர்ந்து முன்பு மாயை சீவித்தாற்போல விப்பொழு

து மிந்தஞானமே யிவனுக்குத் தனுகரண புவனபோகமுமாய் நிற்கும், — தாமுனியிற் பூமடந்தைதங்காள் புகழ் மடந்தைபோ யகலு நாமடந்தைநில்லா ளயந்து = இப்படிப்பட்ட சிவஞானிகளுக்குக் கோபப்பிரியங்க ளில்லையாயினு மிகுத்த பாவிகளால் அவர்கள் திரிவுளங் கரிஷினகாலத்து அந்தப் பாவிகளுக்குண்டான ஐஸ்வரியமும்போ யவர்கள் கீர்த்தியும் விட்டுப்போயவர்கள் வாக்குகளுந் தம்பியாநிற்கும். சிவனைக்கூடி நின்ற சிவஞானிகளுக்கும் பிராரத்தத்தாலே நிலைதிரிந்தாலும் விசுவங்கூடாமல் ஞானங்கூடின காரணமேதென்னில்? ஞானத்திலே நின்றவன் விழுந்தா லதற்குக்கீழான பிரபஞ்சத்திலே விழாநிற்பன், ஞேயத்திலேயழுந்தினவனுக்கு நிலைதிரிந்தா லதற்குக்கீழான ஞானத்திலேவிழுவன், இதனையொழிந்து விசுவங்கூடாதெனவறிக. (௬௮)

இப்படிச் சிவனைப்பெற்றவர்கள் முத்தராய் விடுவதொழிந்து ஒன்றையாக்குத லழிக்குதல் செய்கிறவிது ஈஸ்வரன்கிருத்தியமாயிருக்க விவர்களுக்குண்டானபடி யெப்படியென்ற மாணாக்கனைநோக்கி யருளிச்செய்கிறார்.

துரியங் கடந்தசுடர்த் தோகையுட னென்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான் - றுரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளு
மாக்கியிடு மன்பர்க் கவன்.

இ - ள். துரியங்கடந்த சுடர்த்தோகையுடனென்றும் பிரியாதே நிற்கின்ற பெம்மான் = ஆன்மபோதத்தா லறிதற்கரிய ஞானசத்தியுடனே யெக்காலமும் விட்டு நீங்காமனிற்கிற பரமேஸ்வரனானவன், — துரியத்தைச் சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளுமாக்கியிடு மன்பர்க்கவன் = தன்னுடையவளவிலே மிகுத்த வன்பைவைத்த வான்மாக்களை யான்ம

போதங்கூடாமல் விழிப்பித்த ஞானசத்தியிலேகூட்டித் தன்னு லேசெய்யப்பட்ட வநுக்கிரகநிக்கிரகங்களையு மவர்களைக்கொண்டு தான் கூடிநின்று செய்வித்து அவர்கள் செய்தார்களாம்படியே நிறுத்தாநிற்பர்கள். (கூகூ)

இப்படிப்பட்ட சிவஞானிக ளருளாலே செய்த சாமர்த்தி யங்களை நாலுசெய்யுளாலே யருளிச்செய்கிறார்.

ஓடஞ் சிவிகை யுலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்த - லேடெதிர்வெப்
பென்புக் குயிர்கொடுத்த லிங்கிவைதா னேங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்.

கொல்கரியி னீற்றறையி னஞ்சிற் கொலைதவிர்த்தல்
கல்லே மிதப்பாய்க் கடனீந்த - னல்ல
மருவார் மறைக்காட்டில் வாச றிறப்பித்த
றிருவாமூ ராளி செயல்.

மோக மறுத்திடினு முத்தி கொடுப்பதென
வாகமங்கள் சொன்ன வவர்தம்மைத் - தோகையர்பாற்
றூதாகப் போகவிடும் வன்றொண்டன் றொண்டுகளை
யேதாகச் சொல்வே னியான்.

பாய்பரியோன் றந்தப் பரமானந் தப்பரனைத்
தூயதிரு வாய்மலராற் சொற்செய்து - மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன்.

இ - ள். இப்படி நாயன்மார்செய்த செயற்பாடுகளையு மறி வாயாக. (எரு)

இப்படிப்பட்ட சிவயோகமே முத்தியைத் தருவதென்றும் நின்றயோகங்களெல்லாம் சநநத்தை விளக்குமென்று மருளிச் செய்கிறார்.

அம்மையினு மிம்மையினு மச்சந் தவிர்த்தடியா
ரெம்மையுமா யெங்கு மியங்குதலான் - மெய்மைச்
சிவயோக மேயோக மல்லாத யோக
மவயோக மென்றே யறி.

இ - ள். அம்மை—யறி=தம்பிரானர் திருவடியைப்பெற்ற சிவயோகிகள் பதமுத்திகளாலுண்டான பயங்களையும் பிராரத் தத்தாலே யிந்தலோகத்திலுண்டான பயங்களையுஞ் சொருபத்தி னைக்கியத்தாலேகெடுத்து அந்தச் சொருபத்துக்குள்ளளவும் வியாத்தரா யொருசங்கற்ப விகற்பமின்றியே யெவ்விடத்துந் தங்கள் சுவெச்சையிலே திரிகையால் மாணவகனே ? இப்படிச் சற்காரியமான சிவயோகமே சிவனையுள்ளபடியறிந்து கூடின யோகமாவது. மற்றுமுள்ள யோகமெல்லாஞ் சிவனையுள்ளபடி யறியாத யோகமாகையா லவையெல்லாஞ் சநநத்தையுண்டாக் குமென்றே யறிவாயாக. (எசு)

ஆன்மாக்க ளெல்லார்க்குங் கர்த்தா வொருவனுயிருக்கச் சிலரைப் பதமுத்திகளிலே வைத்துஞ் சிலரைத் திருவடியிலே சேர்த்துக்கொண்டுஞ் சிலரை விஸ்வத்திலேநிறுத்தியுஞ் செய் தாற் பக்ஷவாதியாகானோ வவனுடையகிருபைக்குப் போதமோ வென்ற மாணுக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

மன்னரு ளெவ்வண்ண மானுடர்பான் மாணவக
வன்ன வகைய தரனருளு - மென்னி
லடியவரே யெய்லாரு மாங்கவர்தா மொப்பி
லடியவரே யெல்லா மறி.

இ - ள். மன்—அறி = மாணவகனே ? இராஜாவான வன் தன்னுடைய வாக்கினையினுலே தனக்கு நடக்கு மந்தராச் சியங்களில் பிராணிகளெல்லாரையு மிரக்ஷிக்கவேணுமென்கிற கருத்தெப்பொழுது முண்டாயிருக்கச் செய்தேயும் புத்திமான்க ளுமாய்ச் சாந்தருமாய்த் தன்னுடையவளவிலே மிகுந்தசிநேகங் களை யுடையவருமா யிருக்கத்தக்கவர்களைத் தானுகப் பார்த்துந் தன்னுடைய வளவிலே சிநேகமின்றியே காரியத்தைப்பெற்ற வாக்கினைக்குப் பயந்திருக்கத்தக்கவர்களை யொவ்வொரு முகங் களிலேவைத்தும், குணஹீனரா யிருக்கத்தக்கவர்களை யவர் களுக்குத்தக்க தண்டங்களிலே தண்டித்து அவர்கள் குண வான்களாகும்படி செய்கிற விவையெல்லாங் கிருபையேயானுற் போலப், பரமேஸ்வரருடைய திருவுளமெல்லா ரளவிலுமொத்த வன்பாயிருப்பினு மலபாகமுண்டாமளவும் ஆன்மாக்களுக்குத் தனுகரணபுவனபோகங்களையுங் கன்மபலங்களையுங்கூட்டிச் சுக துக்க வேதனைகளிலேவைத்துச் சிலரைச் சத்திநிபாதத்துக் குறைதலைக்கீடாகப் பதமுத்திகளிலேவைத்து, மிகுத்த சத்தி நிபாத முடையவர்களைத் திருவடியிலே சேர்த்துக்கொண்டு முறைமையிலே சேர்த்தருளாநிற்பனென்று சொல்லுகையா லெ ல்லாருமவருக்கடிமையா யிருக்கச்செய்தேயுந் திருவடியைப் பெற்றவடியா ரொப்பில்லாத வடியாராகையால் நீயுமிவையெல் லாவற்றையுமறிந்து திருவடியிலே பொருந்தியிருக்கிற சிவ யோகமே சநநத்தை யறுக்கிறயோகமென்று மிதிலே நிலைநின் றநுபவிப்பாயாக,   (எ௫)

இப்படி யொப்பில்லாத வடியார்க்குந் தேகமுள்ளளவும் பிராரத்தம் புசிக்கவேண்டுகையில் பிராரத்தம் புசிக்கச்செய்தே யாகாமியமேறுமற் புசித்தபடி யென்னென்ற மாணுக்கனை நோக்கி யருளிச்செய்கிறுர்.

உடம்புடைய யோகிகடா முற்றசிற் றின்ப
மடங்கத்தம் பேரின்பத் தாக்கிற் - றொடங்கி
முளைப்பதுமொன் றில்லை முடிவதுமொன் றில்லை
யிளைப்பதுமொன் றில்லை யிவர்.

இ - ள். உடம்புடைய யோகிகடா முற்றசிற் றின்பமடங் கத்தம் பேரின்பத் தாக்கில் = பிராரத்தநாசம் பிறக்குமளவு முடம்பிருக்கத்தக்க சிவயோகிகள் தாம் சிற்றின்பத்தைப் பொருந்தினார்களாயினு மந்தச் சிற்றின்பமானது நிலையில் வேறுபாடும் பாவனையில் வேறுபாடு மொழியப் பேரின்பத்திலே வேறுபாடில்லையாகையா லிவர்களுக்கிந்த விரண்டுவேறுபாடுமின்றிச் சொரூபத்திலே நிலைத்திருந்தாலும் ஞானத்திலொழிந்து மலமாயாதி கன்மங்களிற்படார்கள். ஆதலாலே, கூடின சிற்றின்பங் களெல்லாம் ஞானத்திநிலையாலே மீண்டு மந்தப்பேரின்பத் திலே யாக்கிக்கொள்ளாநிற்பர்கள். இப்படிச் செய்யி லிவர்களுக்கு — தொடங்கி முளைப்பது மொன்றில்லை முடிவது மொன்றில்லை யிளைப்பது மொன்றில்லை யிவர் = பிராரத்தம் புசிக்கச்செய்தேயு மறுமைக்கு வித்தான வாகாமியமங்குரிப்பது மொன்றில்லை பிராரத்தநாசம் பிறந்து தேகமானது கழுவுங் காலத்து இவ்வுடம்புடன்கூடி மரிப்பதுமில்லை; ஆகையா லிவர்களொரு கன்மங்களாலு மொருசற்றுஞ் சலியார்கள். ()

ஞானத்தாலே சொரூபத்தைக் கூடவேணுமாகி லந்த ஞானந்தானே யமையாதோ சொரூபமென்று ஒருபொருள்கூட வேணுமோவென்ற மாணாக்கனைநோக்கி யருளிச்செய்கிறார்.

பேரின்ப மான பிரமக் கிழத்தியுட
னோரின்பத் துள்ளானை யுள்ளபடி - பேரின்பங்
கண்டவரே கண்டார் கடலுயிர்த்த வின்னமுத
முண்டவரே யுண்டார் சுவை.

இ - ள். பேரின்பமான பிரமக்கிழத்தியுட னின்பத் துள்ளானையுள்ளபடி பேரின்பங்கண்டவரே கண்டார் = அள விடப்படாத பரமானந்தமான பிரமசத்தியுடனே யிடைவிடாத சுகரூபனுயிருக்கிற பரமேஸ்வரனை முறைமையிலேகூடியந்தப் பரமாநந்தமே யநுபவிக்கிற சிவயோகிகளே சிவனை யுள்ளபடி யறிவார்கள்,—கடலுயிர்த்த வின்னமுதமுண்டவரே யுண்டார் சுவை = கடலிற்பிறந்த வினியவமுதத்தைப் புசித்து அதிலு ண்டான் விரதத்தி லமுழ்ந்தினவர்களே யமுதத்தைப் புசித்தவர்க ளு மிதிர்பிரயோசனமான நித்தியத்துவம் பெற்றவர்களுமல் லது, அந்த வமுதத்தைத் தரிசித்தமாத்திரத்தி லதினுடைய விரதமுந்தெரியாது பேறுங்கூடாது. அதுபோல், மலமாயாதி கன்மங்களை நீங்கி ஞானத்தைத் தரிசித்தாலுஞ் சிவனைக்கூடிப் பரமானந்தத்தை யநுபவித்தாலொழிந்து ஞானமறிந்த மாத்திர த்தில் சாயுச்சியங்கூடாது. (எஎ)

இப்படிச சுகரூபமாயிருக்கிற பரமேஸ்வரன் ஙர்ஞவிதமா யிருக்கிற பிரபஞ்சத்துக்குக் கத்தாவாகி லவனும் விகாரியாகா னே வென்றமாணுக்கனைநோக்கி யருளிச்செய்கிறுர்.

நங்கையினு ணுமனைத்துஞ் செய்தாற்போ னுடனைத்து
நங்கையினுற் செய்தளிக்கு நாயகனு - நங்கையினு
நம்பியாய்த் தானடுவே நாட்டப் பெறுமிதுகா
ணெம்பெருமா னுர்த மியல்பு.

இ - ள். நங்கை—இயல்பு = நம்முடைய நினைவின்வசத் திலேநின்று கைகள் முதலான வங்கங்களெல்லாந் தொழில்களை யுஞ் செய்துமுடியாநிற்க வந்தச் செயற்பாடுகளெல்லா நம் முடையமேலே யேறுமாப்போலச் சுகரூபியாயிருக்கிற சிவன் சாக்ஷிமாத்திரமாயிருக்கத் தன்னுடைய சத்தியாலே பிரபஞ்ச நடத்தாநிற்க விந்தச்சத்தியினு நிர்விகாரமாயிருக்கிற சிவன்

தாமொன்றைச் செய்யாதிருக்கச் செய்தேயு மிந்தச் சத்திக்குப் பிராணனுமாய் நாயகனுமாகையாலே யிந்தச்சிவனையே கர்த்தாவாகச் சொல்லப்படுதலால் மாணவகனே? இவ்வளவேகாணெம்முடைய கத்தாவுக்குச் செயலாயுள்ளது. (எஅ)

இப்படி வெகுவிதமான சத்தியிலே நிர்விகாரமான சிவன் பொருந்திநின்றபடி யெப்படியென்ற மாணுக்கனைநோக்கி யருளிச்செய்கிறார்.

பொன்னிறங் கட்டியினும் பூணினு நின்றற்போ
லச்சிற மண்ணனு மம்பிகையுஞ் - செங்கிறத்த
ளெங்கிறத்த ளாயிருப்ப ளெங்கள் சிவபதியு
மங்கிறத்த னாயிருப்ப னாங்கு.

இ - ள். பொன் — ஆங்கு=பொன்னுக்கு நிறமானமாற்றானது கட்டியானபோது மாபரணங்களானபோது மாற்றுக்கு வேறுபாடில்லாதாற்போலச் சுகரூபனான சிவனும் ஞானசொரூபியுமான சத்தியுமிந்த முறைமையேயாதலால் பிரபஞ்சநிமித்தமாகச் சத்தியானது யாதொருரூபமா யிருந்தது நம்முடைய கத்தாவாகிய சிவனு மந்தவிடங்கள்தோறு மந்தந்த முறைமைக்காயே யிராநிற்பன். (எகூ)

இன்னமுஞ் சிவனுடைய நிலைமையை விளங்க வருளிச்செய்கிறார்.

தாரத்தோ டொன்றுவர் தாரத்தோர் கூறுவர்
தாரத்தோ டெங்குந் தலைநிற்பர் - தாரத்தி
னுதாந்தத் தேயிருப்பர் நாற்றானத் தேயிருப்பர்
வேதாந்தத் தேயிருப்பர் வேறு.

இ - ள். தாரத்தோ டொன்றுவர் = சிருட்டிகாலத்திலே யான்மாக்கள் சூக்குமதேகத்துடனே யிச்சா ஞானக்கிரியை சேவிக்கைப்பொருட்டாகச் சிவனும் தம்முடைய சத்தியைத்

தோற்றுவித்துத் தாமு மந்தச்சத்தியுடனேகூடி யிச்சாஞானக் கிரியாசொரூபமாவர்—நாரத்தோர் கூறுவர் = அவர்களுக்குத் தூலதேகமாய் வகுப்புண்ணவேண்டித் தாமுஞ் சத்தியுமாக அர்த்த நாரீச்சுரமான விக்கிரகமாகாநிற்பர்,—நாரத்தோடெங் குந் தலைநிற்பர் — அந்த வான்மாக்களுக்கு மலபாக முண்டா கைப்பொருட்டு அவர்கள் கன்மங்களிலே யநுபவிக்கவும் ஆர்ஜ ஜிக்கவும்வேண்டி சத்தியுருவமான பிரமவிஷ்ணு உருத்திரர் மஹேஸ்வரர் சதாசிவரென்று சொல்லப்பட்ட விக்கிரகங்க ளுடனே யந்தரமூர்த்தியான பிரணவசொரூபமாய் ஆன்மக்க ளிடங்களிலே மாயாதத்துவங்களுடனேகூடி நடத்தாநிற்பர்,— நாரத்தினுதாந்தத்தேயிருப்பர் = மீண்டு மான்மாக்களையுந் தத்து வங்களையும் பிரிக்கவேண்டி மஹாமாயாசத்தியான நாதாந்த மான நிருவிகாரத்திலேயிராநிற்பர்,—நாற்முனத்தேயிருப்பர் = இவையொன்றையுமறியாம லுபாதானங்களிலே மறைப்பட வேண்டி நாலாந்தானமான திரோதானசத்தியிலேயிராநிற்பர்,— வேதாந்தத்தேயிருப்பர் = இவற்றுக்கு அநுக்கிரகமே செய்ய வேண்டி வேதத்திலே முடிந்தபொருளான பராசத்தியிலே யிரா நிற்பர்,—வேறு = இப்படி யெல்லாமாய் நிற்கச்செய்தேயு மிவற்றுக்குத் தான்வேறுமாய் தன்னுடைய சுபாவமான சொரூ பமா யிராநிற்பர். (அ௰)

இப்படி பரமேஸ்வர னெல்லாமாயல்லவுமாய் நிற்கிற முறைமையைப் பேதமென்னவோ வபேதமென்னவோ பேதா பேதமென்னவோ வென்ற மாணுக்கனைநோக்கி யருளிச்செய் கிறார்.

ஒன்றுரைத்த தொன்றுரையாச் சாத்திரங்களொன்றுக
நின்றுரைத்து நிச்சயிக்க மாட்டாவா - லின்றுரைக்க
வென்னு லியன்றிடுமோ வென்போல்வா ரேதேனுஞ்
சொன்றற்று னேறுமோ சொல்.

இ - ள். ஒன்று—சொல் = வெகுவிதமாயுள்ள சாத்திரங்களெல்லாமொரு சற்றுந்தரித்துநின் றவனுடைய வுண்மையை யறுதியிட்டுச் சொல்லமாட்டா. இப்படிப்பட்ட தொன்றை யிப்பொழு தறுதியிட்டுச்சொல்ல வென்ஞல் முடியுமோ, வென்னை யொப்பார் சிலர் சொன்னலும் விசுவசத்திலுள்ளார்க் கேறிடுமோசொல்லாய். இன்னமுமிவனுக் கிந்தமுறைமை விளங்கிற்றில்லையென்று நொந்து இப்படி யருளிச்செய்ததெனக் கொள்க. (அக)

இதனை யின்ன மிவனறியும்படி யருளிச்செய்கிறார்.

யாதேனுங் காரணத்தா லெவ்வுலகி லெத்திரமு
மாதேயும் பாக னிலச்சினையே - யாதலினற்
பேதமே செய்வா யபேதமே செய்திடுவாய்
பேதாபே தஞ்செய்வாய் பின்.

இ - ள். யாதேனும்—பின் = யாதொருக்காரணத்தினலுஞ் சர்வலோகங்க ளெல்லாப்பொருள்களுஞ் சத்தியைப்பொருந்தின சிவனுடைய வடயாளமேயாகையால் நீயுமிதனைப் பேதமென்பாய் அபேதமென்பாய் பேதாபேதமென்பா யிவற்றிற் பொருந்தினதொன்றைச் சொல்வாயாக. பின்னென்றது ஞாதாக்களுக்கு இந்த மூன்று காரியமுங் கருத்தல்லவென்றது. அடையாளமென்றது சர்வமுஞ் சைதன்னியமாக நின்றவர்கட் கன்றி நின்றிரக்ஷிக்கையாலெனவறிக, (அஉ)

இந்தமுறைமையைத்தத்திலழுந்தினவனுக்கொழிந்தகேட்டவனுக்கு விளங்காதென்று இன்னமுமிதனை விளங்க வருளிச்செய்கிறார்.

நின்றபடி நின்றவர்கட் கன்றி நிறந்தெரியா
மன்றினுணின் றுடன் மகிழ்ந்தானுஞ் - சென்றுடனே
யெண்ணுறுமைம் பூதமுத லெட்டுருவாய் நின்றானும்
பெண்ணுறநின் றுடும் பிரான்.

இ - ள். நின்ற—பிரான்=நீ சொல்லுகிறபேதமும் அபேதமும் பேதாபேதமுமன்று சங்காரகாலத்திலே சத்தியையுமொடுக்கிக்கொண்டு சங்காரதாண்டவஞ் செய்ததருளின தம்பிரானே சிருஷ்டிகாலத்திலே தோற்றுவிக்கத்தக்க பொருள்களுடனே பொருந்திய பஞ்சபூதங்களுஞ் சந்திராதித்தரு மான்மாக்களுமாய் நின்றுனும், திதிக்காலத்திலே யடியார்பிறவித்துயரங் கெடத்திருவம்பலத்தி லானந்தநிருத்தத்தை விரும்பினனுமாகையா லனாதியே தன்னுடைய சொரூபந்தோன்றும லான்மாவாய் நின்ற முறைமைபோல வான்மபோதந்தோன்றுதபடிச் சிவனுயே நின்றவர்களுக்கொழிந்து சிவனுடைய வுண்மைதெரியாது. ()

இனிச்சொரூபத்திலே பொருதன்மையாய் நிற்குமுறைமை யருளிச்செய்கிறுர்.

சிவமே சிவமாக யானிீனைந்தார் போலச்
சிவமாகி யேயிருப்ப தன்றிச் - சிவமென்
றுணர்வாரு மங்கே யுணர்வழியச்சென்று
புணர்வாரு முண்டோ புவி.

இ - ள். சிவமேசிவமாக யானினைந்தாற்போலச் சிவமாகியே யிருப்பதன்றி = பேதமுமபேதமும் பேதாபேதமு மறப்பக்குவத் திற்பிறகாசித்தசிவசொரூபமேசோரூபமாக வேறொருவிகற்பமுங்கூடாமல் நானநுபவித்தபடியே யுன்னையும் நிறுத்தநினைந்தாற்போல மாணவகனே நீயுமொருவிகற்பங்கள் கூடாமலந்தச்சொரூபமே சொரூபமாகவிருப்பதொழிந்து,—சிவமென்றுணர்வாருமங்கே வுணர்வழியச்சென்று வுணர்வாருமுண்டோ புவி = தானுந்தனியே யொருமுதலென்றும் சிவனுந் தனித்தொருமுதலென்றுந் தன்னுடையபோதத்தாலே யிந்தச்சிவனை யறியவிசாரிப்பாரு மவ்விடத்தேதான்கெட்டுச் சிவத்துடனே பொருந்த விசாரிப்பாருமுண்டோ வுலகங்களில். (அ௬)

இன்ன மிதனை விளங்க வருளிச்செய்கிறார்.

அதுவிது வென்று மவனானே யென்று
மதுநீயே யாகின்ற யென்று - மதுவானே
னென்றுந் தமையுணர்ந்தா ரெல்லாமி ரண்டாக
வொன்றாகச் சொல்வரோ வுற்று.

இ - ள். அது—உற்று = ஆன்மாவுஞ்சிவமு மெப்பொழுது மிரண்டாயிருக்குமென்றும், சிவமென்றொருமுதலில்லை யான் மாதானே சிவமென்றும், சிவ நீயென்றும் வேறில்லை யுன் னுடைய வுபாதிகள் நீங்கினபொழுதே நீதானே சிவமாகிறா யென்றும் நான் சிவனுடனேகூடிச் சிவனாய் விட்டேனென் றும் தம்மையுள்ளபடி யறிந்திருக்கிற சிவயோகிகளிப்படியே பேதமாகவும் அபேதமாகவும் பேதாபேதமாகவும் சொல்லுவார் களோ மாணவகனே. (அரு)

இனி சர்த்தாவெல்லாமாய்நிற்கிற சுபாவத்தை விளங்க வருளிச்செய்கிறார்.

ஈறாகி யங்கே முதலொன்றா யீங்கிரண்டாய்
மாறாத வெண்வகையாய் மற்றிவற்றின் - வேறா
யுடனா யிருக்கு முருவுடைமை யென்றுங்
கடனா யிருக்கின்றான் காண்.

இ - ள். ஈறாகியங்கே முதலொன்றாய் = சர்வமுமுடிந்த விடத்துச் சிவமொன்றுமேயாய்,—ஈங்கிரண்டாய் = மீண்டுஞ் சிருஷ்டிகாலத்திலே சத்தியைத்தோற்றுவித்து மந்தச்சத்தியுந் தாமுமாய்,—மாறாதவெண்வகையாய் = சர்வத்தையு மந்தச் சத்தியிடமாய்நின்றுந் தோற்றுவித்து அந்தச்சத்தியு மிவையுங் கூடிநின்று நடக்கும்படி யொழிவற்ற வட்டமூர்த்தியுமாய்,— மற்றிவற்றின்வேறாய் = இப்படி யிவற்றிற்பொருந்தி நிற்கச்

செய்தேயு மிவற்றுக்குத் தான்வேறுமாய்,—உடனுயிருக்கு முரு வுடைமை = இப்படி வேறாய்நிற்கச்செய்தேயு மொருமுதல் போல விவைதானேயாய் நிற்கிறவுண்மை,—என்றுங் கடனு யிருக்கின்றான்காண் = மாணவகனே ? எப்பொழுது மவ னுடையனு யிருக்கின்றான்காண். 'இது பேதமென்பார்க்கு மபேதமென்பார்க்கும் பேதாபேதமென்பார்க்கு மிவையொன்று மல்லவென்பார்க்கும் பொருந்திநிற்ப னென்னுமுறைமை யறி வித்தது. (௧௬)

சிவனுக்குச் சர்வமுந் திருமேனியாகி லுடலுறவதெல்லா முயிருறுதோவென்ற மாணுக்கனைநோக்கி யருளிச்செய்கிறார்

உன்னுதரத் தேகிடந்த கீட முறுவதெல்லா
முன்னுடைய தென்னுநீ யுற்றனையோ - மன்னுயிர்க
ளெவ்வகையே காணிங் கழிவதுவு மாவதுவுஞ்
செவ்வகையே நின்றசிவன் பால்.

இ - ள். உன்—பால்=மாணவகனே ? உன்னுடையவுதரத் திலே நானுவிதமாய்கிடக்கிற ஜந்துக்கள் வினைக்கீடாக அவை படுகிற சுகதுக்கவேதனைகளெல்லா முனக்குள்ளவினைபோல நீ கூடிநின் றநுபவித்ததுண்டோ ? ஆகையால், சர்வத்தையுங்கூடி நிற்கச்செய்தேயு மவையொன்றுடனும் பற்றறநின்று பிரகாசிக் கிற சிவனிடத்திலே யவனருளாலே நிலைபெற்றுநிற்கிற வான் மாக்க ளாகையுமழிகையுமாய் வருகிறவுண்மை யந்தமுறைமை போலக்காண், இது சுகதுக்கவேதனைக ளான்மாவுக்கொழிந்து சிவனுக்கில்லையென்னுமுறைமை யறிவித்தது. (௧௭)

சிவன் சுகதுக்கவேதனைகள்கூடாமல் நிற்கச்செய்தே சர்வமுந்தானாக நிற்கிறசாமர்த்திய மருளிச்செய்கிறார்.

அவனே யவனி முதலாயி ேறனு
மவனே யறிவாய்நின் ருனு - மவனேகா
ணு ணுகிப் பெண்ணு யலியாகி நின்ருனுங்
காணமை நின்ருனுங் கண்டு.

இ - ள். அவனே—கண்டு = மாணவகனே ? பிருதிவி முதல் நாதமீருனதத்துவங்கள் சேட்டிக்கும்படி யந்தத் தத்துவங்களுக்குத் தத்துவனுநின்ருனு மந்தப்பரமேச்சுரனே, யிந்தத் தத்துவங்களைப்பொருந்தி யான்மாக்கள் கன்மபலத்தைப் புசிக்கும்படி யந்தவான்மாக்களுக்கு ஆன்மாவாய்நின்ருனு மந்தப் பரமேச்சுரனே, தோற்றப்பட்ட பூதகாரியங்களான்மாக்கள் செய்த வினைக்கீடாக பெண்ணுணலியென்றும் வகுப்புண்டு வடிவாம்படியவற்றை வகுப்பித்து இந்தவகுப்புக்கு வகுப்பாய் நின்ருனு மந்தப் பரமேச்சுரனே,இவற்றை யிப்படியறிந்துகூடி யிவை தானய்நின்று நடத்தச்செய்தேயு மிந்த முறைமைக ளொன்றுமறியாதபடி திரோபவித் தொருபணியறநின்ருனு மந்தப் பரமேச்சுரன். (அஅ)

இப்படிப்பட்ட பரமேஸ்வரனை யிந்ததிருஷ்டியாலே காண வொண்ணுதோவென்றன்பு மிகுதியாலேகேட்ட மாணக்கனை நோக்கி யருளிச்செய்கிருர்.

இன்றுதா னீயென்னைக் கண்டிருந்துங் கண்டாயோ
வன்றித்தா ஞனுன்னைக் கண்டேனே - வென்ரு
லருமாயை யின்றவடன் பங்கனையார் காண்பார்
பெருமையைச் சூழல் பிழைத்து.

இ - ள். இன்று—பிழைத்து=இப்பொழுது நீ யென்னைக் கண்டு மிவையெல்லா மறியச்செய்தேயு மென்னுடையசொரு பத்தை யுன்னுடைய மாங்கிஷ திருஷ்டியாலேகண்டாயோ வல்லது மிவற்றையெல்லா வறிந்தறிவிக்கிற நாந்தா னுன்னுடைய

சொரூபத்தை யிந்தத் திருஷ்டியாலே கண்டேனேவென்றால் யாவற்குந்தெரியாத மாயையைப்பெற்ற சத்தியைப் பாதியிலே யுடையபரமேச்சுரனை மாங்கிஷதிருஷிடியாலே காணவல்லார் யாவர். விடப்படாத மாயையாலே மறைக்கத்தக்க மறைவ்பை யெல்லாந்தப்பி இந்தத் திருடிஷ்கோசரமாகக்கண்டு வழி பட்டு வீடுபெறுகைக்கு நம்மைப்போலெழுந்தருளி வந்தனுக்கிர கித்த வாசாரியமூர்த்தியையொழிந்து வேறொருதெய்வமில்லை யென்றறிவித்தது. (அசு)

இப்படி கடாக்ஷித்த ஞானகுருவின் பெருமையை யருளிச் செய்கிறார்.

கடலலைத்தே யாடுதற்குக் கைவந்து நின்றுங்
கடலளக்க வாராதாற் போலப் - படியி
லருத்திசெய்த வன்பரைவந் தாண்டதுவு மெல்லா
கருத்துக்குச் சேயனைக் காண்.

இ - ள். கடலலை—காண் = மாணவகனே ? கடலின்கண் ணெய்தி திரைகளையலைத்து நின்றுடுதற்கு வல்லசாமர்த்திய வான்களுக்குங் கடலினுடையவாழமு மகலமு நீளமுமறிய வாராதுபோலச் பூமியின்கண்ணே சரியைகிரியையோகங்களி லே திரவநுட்டித்த் பத்திமான்களுக்குஞ் சிவனுடைய ரூப சொரூப சுபாவங்களை யறியவிசாரிக்கி லவர்கள்கருத்துக்கு மெட்டாதாகையாலே நம்மைப்போலச் தம்பிரான் திருமேனி கொண்டெழுந்தருளிவந்து ஞானதீக்ஷாக் கிரமங்களினலே மலங்களைப்போக்கி யவர்களை யடிமைகொண்டது. (கூ0)

ஆகையால் நம்முடையபொருட்டாத் திருமேனிகொண் டெழுந்தருளிவந்த வாசாரியனே யருளுஞ் சிவமுமென் றருளிச்செய்கிறார்.

சிவனெனவே தேறினன்யா னென்றமையா லின்றுஞ்
சிவனவனி வந்தபடி செப்பி - லவனிதனி
லுப்பெனவே கூர்மை யுருச் செய்யக் கண்டமையா
லப்படியே கண்டா யவன்.

இ-ள். சிவன்—அவன் = சிவனெனயானுந் தேறினன் காண்க என்று திருவாதவூர் நாயனாருளிச்செய்த பிரமாணப்படி நம்மை யிரக்ஷிக்குங்காரணத்தா லிப்பொழுதும் பரமேஸ்பரன் நம்மைப்போ லெழுந்தருளிவந்த முறைமைசொல்லி லுலகதனி லுவரிதமான கூர்மை யுப்பாகவே வடிவங்கொண்டதெல்லாங் காண்கையா லப்படியேகாண் மாணவகனே யருளாலே சிவன் திருமேனிகொண்ட முறைமை. (சுக)

இன்னமு மிவன்சந்தேகந்திராததுகண்டு ஆசாரிய ரான்மாக்களி லொருவனல்லாவானபடியைத் திட்டாந்தபூர்வமாக வருளிச்செய்கிறார்.

அவனிவனாய் நின்ற தவனருளா லல்ல
தெவனவனாய் நிற்கின்ற தேழா - யவனிதனிற்
றோன்றுமாப் புல்லூரி தொல்லுலகி லம்மாமா
யீன்றிடுமோ சொல்லா யிது.

இ-ள். அவன்—யிது = வாக்குமனதித கோசரமாயுள்ள சர்வேஸ்வரன் ஆன்மாக்களைப்போல தேகியாய்த்தோன்றின விது சகலரிற்பக்குவரான ஆன்மாக்களுக் கவர்களுடைய சத்திநிபாதத்துக்கீடான சங்காரங்களாலே யவர்களுடைய மலமாயாகி கன்மங்களைப்போக்கித் தனக்குடைமையான பரமானந்தத்தையளிக்கைக்குத் தன்னுடையவருளாலே திருமேனிகொண்டெழுந்தருளிவந்ததொழிந்து எப்படிப்பட்டவ னெப்படியாய் நிற்பானென்றுசொன்ன யறிவில்லாதவனே ; அதென்போல வென்னில், பூமியின் கண்ணே தோன்றினமாமானது புயன்

படுங்காலங்களிலே கைம்மாறுகருதாமல் சிரத்தையுள்ளவர்களுக்குப் பலன்களைக்கொடுத்துச் சந்துஷ்டிபிறப் பியாநிற்கும், இஃதொழிந்து இந்த மரந்தாரகமாய்நிற்கிற புல்லூரிமறத்தின் பலத்தைகொடுக்கவற்றோ மாணவகனே சொல்லாய். இதனை=இது திருமேனிகொண் டெழுந்தருளிவந்த வாசாரியனைச் சிவன்றானென்றே தெளியவறிவித்தது, (கூஉ)

அருளென்ப தொன்றுவேண்டுமோ சிவமொன்றுமேயமையாதோவென்ற மாணாக்கனைநோக்கி யந்தச்சிவமு மருளாலொழிந்து மோக்ஷத்தைக் கொடுக்கமாட்டாதென் றந்தவருளின் பெருமையை யருளிச்செய்கிறார்.

முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்
தத்தி பழுத்த தருளென்னுங் - கத்தியினான்
மோகக் கொடியறுக்க முத்திப் பழம்பழுக்கு
மேகக் கொடியெழுங்கா ணின்று.

இ-ள். முத்தி — இன்று =முத்தியைப்பெறுவதற்குமுதலான வான்மாவென்ப தொருகொடியிலே யநாதியே மறைக்கத்தக்க வாணவமலத்தின்காரியமான வஞ்ஞானமானகொடி வெகுவிதமாகப்படர்ந்து, இதனாலே யிதாகிதம்விளைந்து, இது காரணமாக மயக்கத்தைச்செய்கிறமாயையாலே பூதகாரியமான வுடம்பு சநநந்தோறும் பலியாநிற்கும். இவை பக்குவப்பட்ட வெல்லைகளிலேயறிந்து தம்பிரானுந் திருமேனிகொண் டெழுந்தருளிவந்து அருளாலேசமைந்த வநேகதாரைப்பட்டவாளாலே யிந்தவாணவமல்மான மூலத்தைவேரறுக்க, வப்பொழுதெல்லா மலங்களின்முத லடங்கலுஞ்சோர்ந்துபோய் முத்தியானது வெகுபலமாகப் பலியாநிற்கும், இந்தப்பழக்கத்தினுடைய விரசத்தினாலே சிவமென்று மான்மாவென்று மிரண்டல்லாதபடி யப்பொழுதேயொரு நீர்மையானசுபாவத்திற் றோன்றாநிற்கும்.

இனி யிந்தவத்தத்தைத் தமக்கருளிச்செய்து தம்மை யிரக்ஷித்தவாசாரியனையுந் தீக்ஷைமுதலாக வவனிரக்ஷித்த முறைமையையுமின்ற வேழுசெய்யுளாலு மருளிச்செய்கிறார்,

அகளத்தி லானந்தத் தானந்தி யாயே
சகளத்திற் றையலுடன் றோன்றி - நிகளத்தைப்
போக்குவதுஞ் செய்தான்றன் பொன்னடியென் புன்றலைமே லாக்குவதுஞ் செய்தா னவன்.

இ - ள். அகள—அவன் = அடியேனை யீடேற்றுகைப் பொருட்டாகச் சகளீகரமான திருமேனியிலே தன்னுடைய காருண்ணிய சத்தியுடனேதோன்றிக் குற்றமற்ற நிலத்திலுண்டாகிய வாநந்தத்தி லானந்தியாய்ச் சமைந்தெழுந்தருளியிருந்தநாதியே பிணித்தவிலங்காகிய மலமாயா திகன்மங்களை யநேக சங்காரங்களாலே போக்கி யிடுவதுஞ்செய்து, தன்னுடைய பொலிவினையுடைத்தாகிய திருவடியை யென்னுடைய பொல்லாத்தலையிலே வைப்பதுஞ்செய்தான், இது தீக்ஷைமுறைமை யறிவித்தது. (கூச)

குற்றமறுத் தென்னையாட் கொண்டருளித் தொண்ட
னுற்ற தியானத் துடனுறைவர் - முற்றவரின் [டனேன்
மாட்சியுமாய்நிற்பரியான்மற்றென்றைக்கண்டிடினக்
காட்சியுமாய் நிற்பார் கலந்து.

இ - ள். குற்ற - கலந்து = இப்படித் தம்முடைய வருளா லென்னுடைய மலமாயாதி கன்மங்களைப் போக்கியேயென்னுடைய சுதந்தரத்தையுமறுத் தடிமைகொண்டெனக் கநாதியே பிராணனுய்நிற்கிற தம்முடைய திருவடிஞானத்தையும் பிரகாசிப்பித்து, யானென்று மதுவென்றுஞ் சொல்லுகிற வேறுபாட்டையுமறுத்துத் தம்முடையவசத்திலே யாக்கிக்கொண்ட வவ

த்ரங் கூடிக்கொண்ட முறைமையிலே நான் தியானிப்பானும் நிற்கைக்கு வந்தத் தியானமுந் தாமேயாய் நில்லாநிற்பர். இந் தநிலை முதிரவருகிற ஞேயத்தழுந்தலுந் தாமேயாகாநிற்பர். பிராரத்வத்தாலே நிலைதிரிந்து விசுவந்தோன்றுங் காலத்து மந் தவிசுவந் தோன்றாமல் காண்பானுங் காணப்படும் பொருளுந் தாமேயா யிராநிற்பர். இது நிக்கைக்குப்பின்பு உண்மையிலே நிறுத்தின நிலையறிவித்த தெனக்கொள்க. (கூ௫)

ஆளுடையா னெந்தரமு மாளுடையா னேயறியுந்
தாளுடையான் றொண்டர் தலைக்காவ - லாளுந்
திருவிசலூ ராளுஞ் சிவயோகி யின்றென்
வருவினையை மாற்றினான் வந்து.

இ - ள். ஆளுடையான்=இப்படி யெழுந்தருளிவந் தென் னையரிதாக வடிமைகொள்ளுகையாலே யாளுடையதேவரென் கிற திருநாமத்தையு முடையான்,—எந்தரமுமாளுடையானே =என்னைப்போலுந் தளர்ந்தவடியாரையு மடிமைகொள்ளுவானு மவனே,—அறியுந்தாளுடையான் = சர்வான்மாக்கள் பொருட் டாகப் பஞ்சகிருத்தியத்தையும் நடத்திபிதிலே பக்குவப்பட்ட வான்மாக்களை யறிந் திரக்ஷிக்கவல்ல திருவடியுமுடையான்,—தொண்டர் தலைக்காவல்=உரியவடியாரை மாயப்படைமேலி ட்டு வினைசெய்யாது பாதுகாக்கைக்குத் தலைக்காவலாயுள்ள வன்,—நாளுந்திருவிசலூ ராளுஞ்சிவயோகி =எக்காலமுந்திரு விசலூரே திருப்படை வீடாகவுடைய சிவயோகி,—இன்றென் வருவினையை மாற்றினான் வந்து=இப்பொழுது தென்னுடைய வஞ்ஞானத்தாலே கன்மபலங் காரணமாக மாயையாகிற வூச லிலே யுழலாநிற்கிற சநந மரணங்களாகிய விச்சையையொழி த்து அசைவற்றநிலமாகிப திருவடியிலே வைத்தான். இது தம் முடைய வாசாரியன் திருநாமமு மவனது மகிமையு மருளிச் செய்ததெனக் கொள்க. (கூ௬)

தூலத் தடுத்த பளிங்கின் றுளக்கமெனத்
தூலத்தே நின்று துளங்காமற் - காலத்தாற்
றூளைத்தந் தென்பிறவித் தாளை யறவிழித்தார்க்
காளன்றி யென்மா றதற்கு.

இ-ள். தூல—அதற்கு = படிகக்கல்லிற் பிரகாசமான தடுத்தவன்னங்களினுடைய ரூபங்களைக்கொண்டு தன்னுடைய சுத்தமான பிரகாசந் தோன்றும லதுவதுவாய் நின்றுலொக்க நானுந் தேகத்திலே பொருந்திநின்று, சநந மரணங்களிலே மொத்துண்ணுமல் மலபாகமும் கன்மவொப்புஞ் சத்திநிபாதமு முண்டான வவதாத்தே யவதிகூடாமலெழுந்தருளிவந்து தம் முடைய பொன்னுன திருவடியை யென்தலையினு மிருதயத்தி னும் நிற்கும்படி தந்தருளி, எனக் கெழுவகையா யெண்பத்து நான்குநூறுயிர யோனிபேதங்களிலுண்டான சநநங்கள் காலற் றுப்போம்படி திருக்கண்சாத்தியருளின தம்பிரானுர்க்குத் கை ம்மாறுசெய்ய வெண்ணுமளவி லவன்வேறொன்றுக்குங் குறை விலனுகையா லென்னை யடிமையாகக் கொடுத்து நான் பரங் கெட்டு விடுமெதொழிந்து வேறொரு கைம்மாறு கண்டிலேன். இது கைம்மாற்ற வெழுந்தருளிவந் திரக்ஷித்தவ திசயமறிவித் தெனக்கொள்க. (கஎ)

இக்கணமே முத்தியினை யெய்திடினு மியானினைந்த வக்கணமே யானந்தந் தந்திடினு - நற்கணத்தார்
நாயகற்கு நாயகிக்கு நானடிமை யெப்பொழுது
மாயிருத்த லன்றியிலே னியான்.

இ-ள். இக்கணமே - யான். = பெறுதற்கரிய முத்தியினை இப்பொழுது க்ஷணமாத்திரைக்குள்ளே பெறினும் நான் கரு தப்பட்ட பரமானந்தம் கருதின கருத்து மாறுவதன் முன்னே பெறினு மிவையொன்றையு மாதரிப்பதில்லை, இந்தப்பேற்றை

யளிக்கைப்பொருட்டு அடியேனுக்காகத் திருமேனிகொண் டெழுந்தருளிவந்த சிவயோகிகள் தம்பிரானுக்கு மவருக்கு வாக்கு மனக் காயமாய்நின்ற ஞானசத்திக்கு நானெப்பொழுது மீளாவடிமையா யிருப்பதொழிந்து வேறொன்றுமில்லை. இது பேற்றினதிசயத்தா லடிமை சாதித்ததென வறிக. (கூஅ)

என்னை யுடையவன்வந் தென்னுடனாயென்னளவி
லென்னையுந் தன் னுளாகக் கொள்ளுதலா - லென்னை
யறியப்பெற் றேனறிந்த வன்பருக்கே யாளாய்ச்
செறியப்பெற் றேன்குழுவிற் சென்று.

இ - ள். என்னை - சென்று = எனக்குக் கத்தாவாகிய பரமேஸ்வர னென்னுடைய வநாதிமயக்கத்தை நீக்குதல் பொருட்டென்னைப்போ லெழுந்தருளிவந் துனக்குள்ளே பொருந்தி நிற்போமென்று மென்னைத்தெளிய வறிவிக்குமளவி லந்தக்கருணையாலே நானு மப்பொழுதே தம்முடைய வசமாயென்னையு மப்பொழுதே தாம்விரும்பின வடிமையாகக் கொள்ளுகையா லிப்படித் தம்பிரானார்க்கு மீளாவடிமை யானேனென்று மென்னுடைய வுண்மையு மறியப்பெற்றேன், இப்படி முன்னே யறிந் திருக்கிற சிவயோகிகளுக்கு ஏவற்செய்து மவர்கள் திரட்சியிலே சென்றிருக்கவும் பெற்றேன். இனியென்னபெறவேணும், இது பேற்றாலுண்டான நிஷ்பல வேட்கையெனவறிக.

சிந்தையினு மென்றன் சிரத்தினிலுஞ்சேரும்வகை
வந்தவனை மன்னிடநாம் வாராமற் - றந்தவனை
மாதினுட னெத்திறமும் வாழ்ந்திருக்க வென்பதலா
லேதுசொலி வாழ்த்துவே னின்று.

இ - ள். சிந்தை - இன்று. = தன்னுடைய திருவடியானதென்னுடைய தலையினு மிருதயத்திலும் பொருந்தும்படி திரு

மேனிகொண் டெழுந்தருளி வந்த தம்பிரானை. பூமியின்கண்ணே நான் பிறந்திரந்து திரியாதபடி பரமானந்தத்தை யளித்தவனை, எப்பொழுதும் வாழ்த்துமளவில் லெல்லைப்படா தாகையால் தன்னைவிட்டு நீங்காத ஞானசத்தியுடனே யெவ்விடத்தும் வாழ்ந்திருக்குவென்று சொல்லுவ தல்லாலவனை யெப்படி வாழ்த்துவேன். இது சிவனைக் கூடப்பெற்றவர்க ளுணாயுணர் விறந்து நின்றநுபவிக்கும தொழிந்து மவனுடைய வுண்மை யறிந்து துதிக்கவெண்ணுமளவிலவனுணாயுணர்வுங் கெட்டாதவனென்ற விடமறிவித்தது. (ґ)

ஆதார மாகி யருளோடு நிற்கின்ற
சூதான வின்பச் சுகவடிவை - யோதாம
லுள்ளவர்கள் கூடி யுணர்வொழிய நிற்பதலால்
தெள்ளவா ராதே சிவம்.

திருக்களிற்றுப்படியார் மூலமுமுணாயும் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

தனியன்.

சேடன் படிபுரக்குந் தென்கடவூ ருய்யவந்தான்
பாடுங் களிற்றுப் படிதனக்கு - நீடிமையோர்
தேடும் புகழ்ச்செஞ்சொற் சிவப்பிரகாசன் திருந்து
நாடியுரை நாடா நயந்து.